# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்



# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தற்கால மக்களின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர் காட்டிய வழியில் மத உண்மைகளை இந்த மாதப் பத்திரிகை வெளியிட்டு வருகிறது.

சந்தா விவரம்

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ. 12 |
| ஆயுள் சந்தா | ரூ. 150 |
| தனிப் பிரதி | ரூ. 1-20 |

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ. 15 ஆகவோ ஒரு வருடத்திற்குள் செலுத்தலாம்.

வருட சந்தாதாரர்களை ஆயுள் சந்தாதாரர்களாகப் பதிவு செய்து கொள்வதன் மூலம் பத்திரிகையின் வளர்ச்சிக்கு உதவி புரியக் கோருகிறோம். ஆயுள் சந்தா என்பது 35 ஆண்டுகளுக்குப் பத்திரிகை அனுப்பப்படும் என்பதை குறிக்கிறது.

## வேண்டுகோள்

1. மக்களுக்கு உணவு உடை வழங்கி உடல் சம்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்வது மிகவும் நல்ல உதவி ஆகிறது. கல்வி, தொழில் முதலியவற்றைக் கற்பித்து ஜீவனோபாயத்திற்கு வழிவகுத்துத் தருவது அதனினும் மேலான சேவை ஆகிறது. ஆன்மிக சம்பந்தமான நூல்களைப் படித்தும் கேட்டும் ஆத்மசாதனங்களில் ஈடுபடச் செய்வது தலையாய கைங்கரியமாகிறது. தானங்களிலேயே மிகச் சிறந்த தானம் ஞானதானம் என்பது ஆன்றோர் கண்ட உண்மை.

வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இந்தப் புனித மதத் தொண்டில் சிரத்தையுடன் ஈடுபடுவது நமக்கும் மற்றவர்களுக்கும் பெருநலன் தரும்.

2. அன்பர்கள் தங்களின் தெய்விகக் கைங்கரியமாக கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க்கொண்டிருக்கும்படி செய்யலாம். இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப்படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.

3. அன்பர்கள் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். குறைந்தது மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்துத் தருவது மிகப் பெரிய உபகாரமாக இருக்கும். இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.

4. புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தாதாரர்கள் தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

தொலைபேசி :
71231

விவரங்களுக்கு:
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : சென்னை-600 004

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் ஊஞ்சல் சேவை

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எல்லாக் குணங்களையும் அவஸ்தைகளையும் கடந்து விளங்குகிறார். அவர் அவற்றால் பாதிக்கப்படவில்லை; அவைகள் அவரைப் பாதிக்கவும் முடியாது. ஆனால், பக்தர்கள் அந்த ஒப்பற்ற பரம்பொருளைத் தங்கள் உள்ளத்திலேயே உணர்ந்து அனுபவிக்கிறார்கள். ஆகையால் பக்தர்கள், ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எப்போதும் உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் கவலையற்றும் இருந்து, தங்களுக்கு எல்லாவிதமான சௌகரியங்களையும் சௌபாக்கியங்களையும் க்ஷேமங்களையும் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இதுதான் திருமலையில் கண்ணாடி ஹால் எனப்படும் அயன மஹாலில் நாள்தோறும் நடத்தப்படும் ஊஞ்சல் சேவையின் தாத்பரியமாகும். இந்தச் சேவை ஒவ்வொரு நாளும் மாலையில் ஆறு மணிக்குப் பிறகு நடந்து வருகிறது. உற்சவமூர்த்தி அழகாக அலங்கரிக்கப் பெற்ற ஊஞ்சலில் தம் தேவிமார்களுடன் எழுந்தருளுகிறார். கந்தம், சாமர உபசாரங்கள், வேதபாராயணம், பஜனை ஆகியவற்றுடன் ஸ்வாமி லேசாக ஊஞ்சல் ஆடுகிறார்.

மேற்கண்ட ஊஞ்சல் சேவை உற்சவத்தில் பங்குகொள்ள விரும்பும் கிருகஸ்தர்கள் ரூ. 1000 செலுத்தித் தங்கள் குடும்பத்தில் ஆறு பேர்களுடன் இந்த உற்சவத்தில் கலந்துகொள்ளலாம். அவ்விதம் உற்சவத்தில் பங்குகொள்ளும் கிருகஸ்தருக்கு ரூ. 250 பெறுமானமுள்ள தங்க டாலரும் வஸ்திர வெகுமதியும் அளிக்கப்படும்.

எக்ஸிக்யுட்டிவ் ஆபீஸர்,

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.**

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தொகுதி—61 || மார்ச் 1981 || இதழ்—3

## பொருளடக்கம்



## Sri Ramakrishna Vijayam


(Form IV)

(See Rule 8)

Statement about ownership and other particulars about Sri Ramakrishna Vijayam (according to Form IV, Rule 8 circulated by the Registrar of Newspapers for India):

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Madras-600 004 |
| 2. Periodicity of its Publication | : | Monthly |
| 3. Printer's Name | : | K L. Chellappen |
| Nationality | | Indian |
| Address | | Snuddhananda Press, 2 Bajana Koil Street, Sriram Nagar, Adyar, Madras-600 020. |
| 4. Publisher's Name | : | Swami Tanmayananda |
| Nationality | | Indian (Hindu Monk) |
| Address | | Sri Ramakrishna Math, Mylapore, Madras-600 004. |
| 5. Editor's Name | : | Swami Tanmayananda |
| Nationality | | Indian (Hindu Monk) |
| Address | | Sri Ramakrishna Math, Mylapore, Madras-600 004. |
| 6. Name & address of the individuals who own the newspaper and partners or shareholders holding more than 1% of the capital | : | Sri Ramakrishna Math, Mylapore, Madras-600 004. |

I, Swami Tanmayanada, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

*Sd.*

Date 1-3-1831


Swami Tanmayananda
signature of the publisher

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

—திருமூலர்

| தொகுதி 61 | ரௌத்திரி ஸு பங்குனி மீ | இதழ் 3 |
|---|---|---|


करारविन्देन पदारविन्दं मुखारविन्दे विनिवेशयन्तम् ।
वटस्य पत्रस्य पुटे शयानं बालं मुकुन्दं मनसा स्मरामि ॥

கராரவிந்தேந பதாரவிந்தம் முகாரவிந்தே விநிவேசயந்தம் |
வடஸ்ய பத்ரஸ்ய புடே சயாநம் பாலம் முகுந்தம் மநஸா ஸ்மராமி ॥

தாமரைக் கையினால் திருவடித் தாமரையை முகத் தாமரை மீது வைத்து ஆலிலையில் சயனித்துள்ள குழந்தை வடிவான முகுந்தனை நெஞ்சில் நினைக்கிறேன்.

உனக்குப் பணி செய்திருக்கும் தவம் உடையேன்
இனிப் போய் ஒருவன்
தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின்சாயை
அழிவு கண்டாய்!
புனத்தினைக் கிள்ளிப் புதுஅவி காட்டிஉன்
பொன் அடி வாழ்க என்று
இனக்குறவர் புதியது உண்ணும் எழில்மால்
இரும்சோலை எந்தாய்!

—பெரியாழ்வார்

விஜயதீபம்

# ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் மகாநாடு

**சுவாமி கமலாத்மானந்தர்**

### முன்னுரை

84 ஆண்டுகளுக்கு முன்பு 1897–ஆம் ஆண்டில் சுவாமி விவேகானந்தரால் ஸ்ரீராம கிருஷ்ண மடம், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஆகிய இரண்டு அமைப்புக்களும் தோற்றுவிக்கப் பட்டன. ஒரே நிர்வாகத்தின் கீழுள்ள இந்த இரண்டு அமைப்புக்களும் ஆனமிகப் பணி களையும் பொதுநலப் பணிகளையும் ஆற்றி வருகின்றன.

1902-இல் சுவாமி விவேகானந்தர் மகா சமாதி எய்தினர். அப்போது ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்திற்கு எட்டு கிளைகள் மட்டுமே இருந் தன. தற்போது நாளும் வளர்ந்தோங்கி வரும் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்திற்கு 138 கிளைகள் உள்ளன. இவை தவிர ஸ்ரீராமகிருஷ்ண– விவேகானந்த இலட்சியங்களை ஏறறுக் கொண்டு அவர்கள் பெயரால் இயங்கிவரும் தனியார் ஆஸ்ரமங்கள் சுமார் 300 இந்தியா வில் இருந்து வருகின்றன

### முதல் மகாநாடு

ஸ்ரீராமகிருஷ்ண சங்கம் செய்துள்ள, செய்து வருகிற, இனி செய்ய இருக்கிற பணி களைத் திறனய்வு செய்து எதிர்காலத்தில் சங் கம் எப்படி இயங்க வேண்டும் என்பதை முடிவு செய்ய 1926–ஆம் ஆண்டில் ஸ்ரீராம கிருஷ்ண மடம், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஆகியவற்றின் முதல் மாநாடு பேலூர் மடத் தில் கூடியது.

முதல் மாநாடு பேலூர் மடத்தில் கூடிய போது ஸ்ரீராமகிருஷ்ணரின் நேர்ச் சீடர்களா கிய சுவாமி சிவானந்தர், சுவாமி சாரதானந் தர், சுவாமி அகண்டானந்தர், சுவாமி சுபோ தானந்தர் ஆகியோர் உடனிருந்து ஊக்கத் தையும் அரிய ஆலோசனைகளையும் மாநாட் டிற்கு வழங்கினர். அம் மகான்களின் முன் னிலையில் ஸ்ரீராமகிருஷ்ண மடம்–மிஷன் ஆகி யவற்றின் பணிமுறைகள் அக்காலத்தில் பாரதத்தில் நிலவிய சூழ்நிலைகளின் அடிப் படையில் ஆராயப்பட்டன.

பேலூர் மடத்தில் 1926-இல் நடை பெற்ற முதல்மாநாடு குறித்த விவரங்கள் அனைத்தும் அடங்கிய நூல் இப்போதும் விற் பனைக்கு இருந்து வருகிறது.

### தற்போதைய சூழ்நிலை

முதல் மாநாடு நடைபெற்று 54 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்த 54 ஆண்டு களில் இந்தியா அரசியல் துறையிலும் சமு தாயத் துறையிலும் பலவேறு மாற்றங்களைக் கண்டுள்ளது. ஸ்ரீராமகிருஷ்ண மடம், மிஷன்

ஆகியவற்றின் பணிகளும் கணிசமான அளவுக்கு வளர்ந்து பெருகியுள்ளது.

ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் கிளைகளின் எண்ணிக்கை நூற்று முப்பத்தெட்டாக உயர்ந்துள்ளது. சங்கத்தைச் சேர்ந்த சாதுக்கள், பிரம்மசாரிகள் ஆகியோரின் எண்ணிக்கையும் ஏறத்தாழ ஓர் ஆயிரத்தை எட்டியுள்ளது.

சங்கத்தைச் சேர்ந்த துறவிகளும் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரிடம் பக்தி பூண்ட இல்லற பக்தர்களும் சேர்ந்து சங்கத்தின் பணிகளை ஏற்று நடத்தி வருகிறார்கள்.

முன்பு ஆங்கிலேயர் ஆட்சி இருந்தபோது 'இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் பின்னணியில் இருந்து ஸ்ரீராமகிருஷ்ண சங்கம்தான் நடத்தி வருகிறது' என்று வெளிப்படையாகவே அறிவித்த வெள்ளைய அரசாங்கம், ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் கிளைகளையெல்லாம் மிகுந்த எச்சரிக்கையுடன் கண்காணித்து வந்தது. வெள்ளைய அரசாங்கத்தின் இந்தப் போக்குக் காரணமாக ஸ்ரீராமகிருஷ்ண சங்கம் பலவேறு இடையூறுகளை அக்காலத்தில் கடந்து வரவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகும் ஸ்ரீராமகிருஷ்ண சங்கம் அரசியல் தலையீடுகளிலிருந்து முழு அளவில் சுதந்திரம் பெறாமலேதான் இருந்து வருகிறது. ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் கல்வி, மருத்துவம், நிவாரணப் பணிகள் ஆகியவற்றுக்குச் சில மாநிலங்களில் நேர்ந்து வரும் அரசாங்கத்தின் தொந்தரவுகள் சொல்லி மாளாதவை.

முன்பு ஸ்ரீராமகிருஷ்ண – விவேகானந்த இயக்கம் மட்டுமே இருந்தது. தற்போது இதே இயக்கத்தின் பணிமுறைகளைப் பின்பற்றி வேறு சில அமைப்புக்களும் இயங்கி வருகின்றன.

ஸ்ரீராமகிருஷ்ண இயக்கம் அல்லது ஸ்ரீராமகிருஷ்ண–விவேகானந்த இயக்கம் என்னும்போது அவை ஸ்ரீராமகிருஷ்ண மடம்-மிஷன் ஆகியவற்றை மட்டுமே குறிப்பதாகக் கொள்ளக்கூடாது. ஸ்ரீராமகிருஷ்ணர், விவேகானந்தர் ஆகியோர்பால் பக்தி பூண்டு அவர்கள் பெயரால் இயங்கி வரும் எல்லா தனியார் நிறுவனங்களும்கூட ஸ்ரீராமகிருஷ்ண – விவேகானந்த இயக்கத்தைச் சேர்த்தவைகளேயாகும். உதாரணமாக, சன்னியாசினிகளுக்காகத் தோன்றியுள்ள ஸ்ரீசாரதா மடமும் கன்னியாகுமரியில் இயங்கி வரும் விவேகானந்த கேந்திராவும், ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த இயக்கத்தை சார்ந்தவைகளே ஆகும்.

ஸ்ரீராமகிருஷ்ண மடம், மிஷன் ஆகியவை ஸ்ரீராமகிருஷ்ண – விவேகானந்த இயக்கத்தின் உயிர்நாடி, இதயம், பெரும்பகுதி என்று சொல்லத்தக்க வகையில் விளங்கி வருவது உண்மையானாலும் அவையே ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்த இயக்கம் முழுவதுமாக ஆகிவிடாது. ஸ்ரீராமகிருஷ்ண மடம், மிஷன் ஆகியவற்றை உள்ளடக்கியும் அவற்றைக் கடந்தும் ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்த இயக்கம் விளங்கிவருகிறது.

60 ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பு ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த இயக்கத்தின் நிலை வேறு, தற்போதைய நிலை வேறு.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பெயரால் இயங்கி வரும் தனியார் ஆச்ரமங்கள் சில, அந்த ஆச்ரமங்களை ஸ்ரீராமகிருஷ்ண மிஷனுடன் சேர்த்துக்கொண்டு ஏற்று நடத்தும்படி சங்கத்தைக் கேட்டுக் கொண்டும் வற்புறுத்திக் கொண்டும் இருக்கின்றன. இவ்விதம் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் பணிகளை விரிவுபடுத்துவதற்கு உரிய வாய்ப்பு ஏறத்தாழ இந்தியா முழுவதிலுமே இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் ஏற்கெனவே ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் கிளைகளாக உள்ள 138 நிறுவனங்களை நிர்வகிப்பதற்கே போதிய துறவிகள் இல்லாத நிலையில், புதிதாக ஆச்ரமங்களை ஸ்ரீராமகிருஷ்ண

சங்கத்துடன் உடனடியாக இணைத்துக் கொள்ள இயலாத நிலை இருந்து வருகிறது.

ஒரு புறம் ஸ்ரீராமகிருஷ்ண மடம், மிஷன் ஆகியவற்றின் பணிகள் வெகு வேகமாக வளர்ந்து கொண்டு வருகிறது மறுபுறம் அந்தப் பணிகளைத் திறம்பட நிர்வகிப்பதற்குப் போதிய எண்ணிக்கைக் கொண்ட துறவிகள் சங்கத்தில் இல்லை என்ற நிலையும் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த நிலையில் ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த அன்பர்களால் ஏற்கெனவே துவக்கப்பட்டு இயங்கி வரும் ஆச்ரமங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றை ஸ்ரீராமகிருஷ்ண சங்கம் ஊக்குவிக்க விரும்புகிறது. மற்றும் வாய்ப்புள்ள இடங்களில் ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த அன்பர்களைக் கொண்டு தனி அமைப்புக்களைத் தோற்றுவிக்கவும் ஸ்ரீராமகிருஷ்ண சங்கம் விரும்புகிறது

நாடெங்கிலும் ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த அன்பர்கள் உள்ளனர். இவர்கள் தொண்டு புரிய முன்வருவார்களானல், இவர்களை முறையாக வழி நடத்திப் பயன்படுத்தினல், சிதறியும் பயன்படுத்தப்படாமலும் உள்ள ஆற்றல்கள் ஒன்று திரட்டப்பட்டால் ‘பல துளி பெருவெள்ளம்’ என்பது போல ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த இயக்கம் மிகவும் வலிமை உள்ளதாக விளங்கும் என்பது வெள்ளிடைமலை. ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த அமைப்புக்களுக்கிடையில் ஒற்றுமையும் சகோதரத்துவமும் வளர்ந்தோங்குவது இயக்கத்திற்கு இன்றியமையாததும் மிகுந்த வலிமையைத் தருவதும் ஆகும்.

ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த இயக்கத்தைச் சேர்ந்த துறவிகள், பக்தர்கள் ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அதிகபட்ச அளவு இயக்கத்தின் ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்கு ஆர்வத்துடன் தொண்டு புரிய வேண்டும். இது ஒன்றே போதிய ஆள் வசதி இல்லாத நிலையில் வளர்ந்து வரும் இயக்கத்தின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்யும்.

இரண்டாவது மாநாடு

1. ஸ்ரீராமகிருஷ்ண மடம்-மிஷன் ஆகியவற்றின் எதிர்கால திட்டம், 2 நாளும் வளர்ந்து பரவி வரும் ஸ்ரீராமகிருஷ்ண–விவேகானந்த இயக்கத்தின் பணிகளுக்கு எத்தகைய பிரச்னைகள் ஏற்படக்கூடும்; அவறறை எப்படி சமாளிக்கவும் நீக்கவும் செய்வது, 3. ஸ்ரீராமகிருஷ்ண மடம்–மிஷன் அங்கத்தினர்களுக்கிடையில் சகோதரத்துவததை வளர்த்து இயக்கத்தைப் பலப்படுத்துவது 4. ஸ்ரீராமகிருஷ்ண–விவேகானந்தக் கருத்துக்களை சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களைக் கொண்டு எப்படியெல்லாம் மக்களிடையே பரப்புவது–ஆகியவையே தற்போது நடைபெற்ற இரண்டாவது மாநாட்டின் அடிபபடை நோக்கங்களாகும்.

துறவிகளையும் எண்ணற்ற இல்லற பக்தர்களையும் கொண்டு சமுதாயத்தில் பல அரிய தொண்டுகளை ஆற்றி வரும் ஸ்ரீராமகிருஷ்ண மடம் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஆகியவற்றின் உலகம் தழுவிய இரண்டாவது மகாநாடு 1980 டிசம்பர் 23 முதல் 29 வரை பேலூர் மடத்தில் சிறப்பாக நடந்தேறியது.

இந்த மாநாட்டின் பொதுக் குழுவிற்கு பூஜ்ப ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தஜி மகராஜ அவர்கள் தலைவராக விளங்கினர்.

மாநாட்டின் தலைவராக சுவாமி ஹிரண்மயானந்தரும், துணைத் தலைவராக சுவாமி வந்தனைந்தரும், செயலாளராக சுவாமி லோகேஸ்வரானந்தரும் விளங்கினர்.

சங்கத்தைச் சேர்ந்த சில துறவிகளைத் தவிர, எல்லா மாநிலங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் அன்பர்கள் பொதுக்குழுவின துணைத்தலைவர்களாக நியமிக்கப் பெற்றிருந்தனர். தமிழ்நாட்டின் சார்பாக பொதுக்குழுவின் துணைத்தலைவர்களாக 17 அன்பர்களும், பொதுக்குழுவின் அங்கத்தினர்களாக 36 அன்பர்களும் நியமிக்கப் பெற்றிருந்தனர்.

(தொடர்ச்சி 153-ஆம் பக்கம் பார்க்க)



# ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

இன்று அமாவாசை நாள். மாலை சாய்ந்து மெல்ல மெல்ல இரவு பரவ ஆரம்பித்தது. கோவிலில் மாலை ஆரதியான வழிபாடு நடந்துகொண்டிருக்கிறது. பன்னிரண்டு சிவாலயங்களிலும், ராதாகாந்தர் கோவில், பவதாரிணி கோவில் ஆகியவற்றிலும் சங்கு மணி ஆகியவற்றின் மங்கல ஒலி முழங்குகிறது.

இதுவரையில் தமது அறைக்குள் அமர்ந்திருந்த குருதேவர், ஆரதிமுடிந்த சில விநாடிகளுக்குப் பிறகு தமது அறைக்குத் தென்புறத்திலிருந்த வராந்தாவில் சென்று அமர்ந்தார். நான்கு திசைகளிலும் இருள் அடர்ந்திருந்தது. கோவிலில் மட்டும் அங்குமிங்கும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. வானத்தில் அசைந்து செல்லும் கருமையான மேகத்தின் கருநிழல் பாகீரதியான புனித கங்கையின் மீது விழுந்துகொண்டிருந்தது.

பரமஹம்சர் இயல்பாகவே பாவ நிலையில் லயித்திருப்பவர். இன்றோ அமாவாசை நாள். அமாவாசையின் காரிருள் அவருக்குக் காளி தேவியின் கருநிறத்தை நினைவூட்டியது. அதனால் அவரது மனம் மிகமிக ஆழ்ந்த தெய்விகப் பரவசத்தில் தோய்ந்திருந்தது. இடையிடையே அவர் ஓங்காரத்தையும் அன்னை காளிதேவியின் திருநாமத்தையும் உச்சரித்தார். கோடைக் காலமாதலால் அறைக்குள் அதிக வெப்பமாக இருந்தது.

ஒரு பக்தர் பரமஹம்சருக்கு அழகிய பாய் ஒன்றைக் கொடுத்திருந்தார். அது வராந்தாவில் விரிக்கப்பட்டிருந்தது. இரவும் பகலும் குருதேவருக்கு ஜகன்மாதாவின் நினைவுதான். பக்தர் கொடுத்திருந்த அந்தப் பாயில் படுத்தவாறே குருதேவர் ம-வுடன் மெல்லிய குரலில் பேசிக்கொண்டிருந்தார்.

**ஸ்ரீராமகிருஷ்ணர் :** இதோ பார். ஈசுவரனை நிச்சயம் தரிசிக்க முடியும். (குறிப்பிட்ட ஓர் அன்பரின் பெயரைச் சொல்கிறார்.) அவர் அவ்விதம் பகவானை நேரே தரிசித்திருக்கிறார். ஆனால் இதை எவரிடமும் சொல்லாதே. அதுசரி, உனக்கு உருவக்கடவுளிடம் அதிக ஈடுபாடு இருக்கிறதா அல்லது அருவக் கடவுளிடம் அதிக ஈடுபாடு இருக்கிறதா?

**ம- :** ஐயா, இப்பொழுதெல்லாம் ஓரளவு கடவுளை உருவம் இல்லாதவராக நினைப்பதே எனக்கு மிகவும் பிடிக்கிறது. ஆனால் பகவானே உருவம் உள்ளவராகவும், உருவம் இல்லாதவராகவும் இருப்பது எனக்கு விளங்க ஆரம்பித்திருக்கிறது.

**ஸ்ரீராமகிருஷ்ணர் :** இதோ பார். பெல்கேரியாவில் இருக்கும் 'மதிசீல்' என்பவரின் தோட்ட விடுதிக்கு என்னை அழைத்துச் செல்கிறாயா? அங்கு ஒரு பெரிய குளம் இருக்கிறது. அதில் பொரியைத் தூவினால் மீன்களெல்லாம் மேலே ஓடி வந்து பொரியைத் தின்னும். ஆகா! மீன்கள் கூட்டம் கூட்டமாக நீரில் துள்ளி விளையாடும். மீன்கள் அவ்விதம் விளையாடித் திரிவதைக் காண எனக்கு மகிழ்ச்சி ஏற்படும். அந்தக் காட்சி உன் உள்ளத்திலும் ஆன்மிக விழிப்பை உண்டு பண்ணும். சச்சிதானந்தமாகிய கடலில்

ஆத்மாவாகிய மீன் விளையாடுவதுபோல் அது தோன்றும்.

அதே போலவே மிகவும் பரந்து விரிந்த ஒரு புல்வெளியில் நான் நிற்கும்போது என் உள்ளத்தில் தெய்விகப் பரவசம் பொங்குகிறது. சிறிய குடத்தில் அடைபட்டிருந்த ஒரு மீனை ஒரு பெரிய ஏரியில் விட்டுவிட்டால் அந்த மீன் எப்படி ஆனந்தம் அடைகிறதோ அப்படிப்பட்ட ஆனந்தம் எனக்கு ஏற்படுகிறது.

ஆண்டவனைத் தரிசிப்பதற்கு ஆன்மிகச் சாதனைகளை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். நான் கடுமையான ஆத்ம சாதனைகள் பலவற்றைச் செய்ய வேண்டியிருந்தது. வில்வமரத்தின் அடியில் எத்தனை விதமான ஆத்ம சாதனைகளைச் செய்தேன் தெரியுமா? 'அம்மா! அம்மா! எனக்கு உன் காட்சியைத் தந்தருள்வாயாக' என்று ஜகன்மாதாவிடம்பிரார்த்தித்து அழுதபடியே பல நாட்கள் மரத்தடியில் விழுந்து கிடந்தேன். அவ்விதம் பெருக்கெடுத்து வரும் கண்ணீரால் என் உடம்பே நனைந்து போகும்.

ம :- நீங்களோ ஆண்டவனைத் தரிசிப்பதற்கு எத்தனையோ வகையான கடுமையான தவங்களை எல்லாம் செய்திருக்கிறீர்கள்! ஆனால் உலக மக்களோ சில விநாடிகளில் பகவானைத் தரிசித்துவிடவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். விரலைச் சுற்றிக் காட்டுவதாலேயே வீட்டின் நான்கு புறத்திலும் மதில் சுவர்களை எழுப்பி விடமுடியுமா?

**ஸ்ரீராமகிருஷ்ணர்** (சிரித்தபடி) : 'ஒருவன் நெருப்பை மூட்டுகிறான்; அதில் பத்துப் பேர் குளிர் காய்கிறார்கள்' என்று அமிருதன் சொல்கிறான். உனக்கு இன்னும் ஒரு முக்கியமான கருத்தைச் சொல்கிறேன். நித்தியத்தை அடைந்த பிறகு, லீலையில் தங்கியிருப்பது மிகவும் சிறந்தது.

ம :- நித்தியத்தை அடைந்த ஒருவன் லீலைக்குத் திரும்பி வருவது, தெய்விக லீலையை அனுபவிக்கும் பொருட்டு என்று தாங்கள் ஒரு தடவை சொன்னீர்கள்.

**ஸ்ரீராமகிருஷ்ணர் :** அப்படியில்லை. லீலையும் உண்மைதான். உனக்கு இன்னொன்று சொல்கிறேன். நீ இங்கே வரும்போது மிகவும் அற்பமானதாக இருந்தாலும் கையில் ஏதாவது எடுத்துக் கொண்டுவா.* நானே இதைச் சொல்வது சரியாகத்தான் இல்லை; இவ்விதம் சொல்வது ஒரு வேளை ஆணவம் போலத் தோன்றும். 'ஒரு பைசாவுக்கு எதையாவது வரும்போது வாங்கிக் கொண்டுவா' என்று அதர்சேனிடமும் கூறினேன். பவநாத்திடம் 'இங்கே வரும்போது ஒரு பைசா வெற்றிலை வாங்கி வா' என்று சொன்னேன். பவநாத்திடம் எப்படிப்பட்ட பக்தி இருக்கிறது பார்த்தாயா? நரேந்திரனும் பவநாத்தும் ஆணும் பெண்ணும் போல இருக்கிறார்கள். பவநாத் எப்போதும் நரேந்திரனைப்பின்பற்றி நடக்கிறான்.

இனிமேல் வரும்போது உன்னோடு வண்டியில் நரேந்திரனையும் அழைத்து வா. ஏதாவது சிறிது தின்பண்டமும் கொண்டுவா. இதனால் உனக்கு மிகுந்த அளவில் நன்மை உண்டாகும்.

ஞானம், பக்தி என்ற இரண்டு வழிகளும் பகவானிடம்தான் அழைத்துச் செல்கின்றன. பக்திவழியில் செல்பவர்கள் நியமம், நிஷ்டை முதலிய ஆசார அனுஷ்டானங்களை மதித்துப் பின்பற்றத்தான் வேண்டும். ஆனால் ஞான மார்க்கத்தைப் பின்பற்றுபவன் இத்தகைய நியம நிஷ்டைகளிலிருந்து சிறிதளவு பிறழ்வது காரணமாகப் பாதகம் ஏற்பட்டு

---

* குரு, சாது மகாத்மாக்கள், பெரியோர் ஆகியோரைப் பார்க்கச் செல்லும்போது வெறும் கையோடு போகக்கூடாது என்று சாஸ்திரம் விதித்திருக்கிறது.

விடக்கூடாது. அது அவனது ஆன்மிக வாழ்க்கையைப் பாதிக்காது. ஞானம் என்ற நெருப்பில் அந்தத் தவறுதல்கள் எரிந்து விடும். கொழுந்து விட்டு எரியும் பெரிய சாம்பலாகி நெருப்பில் வாழை மரத்தைப் போட்டாலும் எரிந்து சாம்பலாகிவிடும்.

ஞானி, நித்திய அநித்திய பொருள் பற்றிய விசார மார்க்கத்தைப் பின்பற்றுகிறான். இவ்விதம் ஞானவிசாரம் செய்யும்போது சிலருக்கு நாஸ்திக உணர்வும் கூடச் சிற்சில சமயங்களில் தலையெடுக்கக்கூடும். ஆனால் உள்ளன்போடு கடவுளை அடைய வேண்டும் என்று அருள்தாகத்துடன் ஏங்குபவன் சில நாஸ்திகக் கருத்துக்களால் பாதிக்கப்பட்டாலும் அவன் இறைவனைத் தியானிப்பதை விட்டுவிடுவதில்லை. யாருடைய பாட்டனும் தந்தையும் பரம்பரை பரம்பரையாக உழவுத் தொழிலையே மேற்கொண்டிருந்தார்களோ அத்தகையகுடும்பத்தில் பிறந்த ஒருவன் ஒரு வருஷம் மழை இல்லாமல் பயிர் நாசமாகி விட்டது என்பதற்காக விவசாயத் தொழிலையே விட்டுவிடமாட்டான். மாறாக அதே பயிர்த் தொழிலைத்தான் தொடர்ந்து நடத்தி வருவான்.

ஸ்ரீ குருதேவர் பாயில் படுத்துக் கொண்டு தலையணையின் மீது தலை வைத்துப் படுத்துக் கொண்டார். அதே நிலையில் தொடர்ந்து ம-விடம் உரையாடிக்கொண்டிருந்தார். இடையில் குருதேவர் ம-விடம், "என் கால்கள் கொஞ்சம் வலிக்கின்றன. அவற்றை இதமாகச் சிறிது பிடித்துவிடு" என்று கேட்டுக்கொண்டார்.

இவ்விதம் ஸ்ரீராமகிருஷ்ணர் ம-விடம் கொண்டிருந்த அளவற்ற கருணை காரணமாகத் தமது திருவடிகளைப் பிடித்துவிடும் சேவை செய்ய அனுமதிக்கிறார். ம-, குருதேவரின் தாமரைத் திருவடிகளைப் பிடித்து விட்டபடியே, குருதேவர் தெரிவித்த வேதத்திற்கு நிகரான அருள் வாக்குகளைக் கேட்டு உய்வடைந்தார்.

❋ ❋ ❋

---

# அஞ்சாமை

ஒரு காலத்தில் பஞ்சாப் நாட்டுச் சிப்பாய் ஒருவன் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்தான். அவனுடன் மற்றச் சிப்பாய்களும் இருந்தார்கள். உடல் நலமின்றிப் படுத்த படுக்கையாகக் கிடந்த சில சிப்பாய்களின் பக்கத்தில் பஞ்சாபிச் சிப்பாயும் போய்ப் படுத்துக்கொண்டான். வைத்தியர் உடனே இவனைக் கடலில் எறிந்துவிடும்படி உத்தரவு செய்து விட்டார். வைத்தியர்கள் சில சமயங்களில் சிறைச்சேத தண்டனையும் விதித்து விடுவதுண்டு.

சிப்பாயின் செவிக்கு இந்தச் செய்தி எப்படியோ எட்டியது. சாதாரண ஜனங்களும்கூட ஆபத்து நேரும் காலத்தில் காட்டும் தைரியத்திற்கு இது ஒரு நிதர்சனம். சிப்பாய் உடனே படுக்கையிலிருந்து எழுந்தான். பயம் அவனை விட்டு நீங்கியது. நேராக வைத்தியர் இருந்த இடத்துக்குச் சென்று தன் துப்பாக்கியை அவருக்கு நேராகக் குறி வைதது்க் கொண்டு, "எனக்கு நோயா? நீர் அப்படிச் சொன்னதுண்டோ? உம்மை நான் சுட்டுத் தள்ளுவேன்" என்று சொன்னான்.

வைத்தியர் உடனே அவன் சுகமாக இருக்கிறான் என்று எழுதிக் கொடுத்து விட்டார்.

மனத்திடமின்மை உங்களைப் பலவீனப் படுத்திவிடும். ஆகையால் அதைவிட்டுத் தூர விலகுங்கள். தைரியமாக இருங்கள்.

—ஸ்ரீராமதீர்த்த சுவாமிகள்

# சிவராத்திரி விரதம்

ராஜம் ஐயராமன்

### புராண வரலாறு

ஒரு சமயம் வியாச முனிவரது மாணுக்கர்களில் சிறந்த சூதமாமுனிவர் என்பவர் நைமிசாரணியத்தில் தவம் செய்து வந்த முனிவர்களைக் காண அங்கு வந்தார். முனிவர்கள் அவரை எதிர்கொண்டு அழைத்து, அவருக்கு வேண்டிய உபசாரங்களைச்செய்து அவரிடம், "சுவாமி! அனுஷ்டிப்பதற்கு எளிதாயும், வினையை ஒழித்து முக்தி நல்குவதாயுமுள்ள சிவபெருமானுக்கு உரிய விரதமொன்றை எங்களுக்குக் கூறியருள வேண்டும்'' என்றனர்.

சூதமாமுனிவர் அதனைக் கேட்டு மனம் மகிழ்ந்து, "வேத ஆகமங்கள் துணிந்துரைக்கும் மேன்மை பொருந்திய விரதம் ஒன்று உள்ளது. இது சிவனுக்கு உரிய விரதங்களில் மேன்மை பெற்று விளங்கும் 'சிவராத்திரி' விரதமாகும்'' எனக்கூறி அதன் வரலாற்றை விளக்குகிறார் :-

உலகங்களும் பிரமனும் அழிந்து பிரளயத்தில் உயிர்கள் ஒடுங்கும் கற்பமுடிவின் இரவில் நான்கு யாமத்தும் உமைப் பிராட்டியார், பொன்னிறம் பொருந்திய கொன்றைமாலையைஅணிந்த சிவபெருமானை ஆகம விதிப்படி இரவு முழுவதும் அர்ச்சனை செய்து, பின்பு இறைவனின் திருவடிகளில் பணிந்து, "சுவாமி! நான் பூசித்த இந்த இரவை வானவரும் உலகோரும் உமக்கு உரியஇரவாகப் பூசிக்க அருளி இந்த இரவில் சூரியன் மேற்திசையில் அஸ்தமித்தது முதல் கீழ்த்திசையில் உதிக்கும் வரையில் உம்மைப் பூசிப்போருக்கு சகல போகங்களையும், முடிவில் முக்தியையும் அளிக்க வேண்டும்'' என்று பிரார்த்தனை செய்ய, சிவபெருமானும் அவ்வாறே அநுக்கிரகம் செய்தருளினர்.

இந்த இரவே சிவராத்திரி என வழங்கி வரலாயிற்று. அன்றியும் சிவராத்திரி மேன்மை பெற்றதற்கு மற்றுமோர் காரணம் உண்டு.

பின்னும் ஒரு முறை ஏற்பட்ட பிரளயத்தில் பிரம்மா, விஷ்ணு ஆகிய இருவரும் 'தானே பிரம்மம்' எனச் செருக்குற்றுப் போர் புரிந்தனர். அப்போது சிவபெருமான் தமக்கு உரிய இரவாகிய மாசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய இரவின் அர்த்தசாமத்தில் அனற் பிழம்பாய் எழுந்தருளினர். இந்த ஜோதிசொரூபத்தினைக் கண்டு பிரம்மாவும் விஷ்ணுவும் மிகவும் ஆச்சரியப்பட்டு, இதன் அடியையும் முடியையும் தேடிச் சென்றனர். அந்த அழலின் அடிமுடி காணமல் வெட்கமுற்றுத் திரும்பினர். பின்பு சிவபெருமான் அவர்களுக்கு அந்தச் சுடரொளியை நீக்கித் தம் உருவைக் காட்டிய இரவுமாகும். இதுவே சிவராத்திரியின் புராண வரலாறு ஆகும்.

### சிவராத்திரி விரதம் அனுட்டிக்கும் முறை

சிவராத்திரியில் மாக சிவராத்திரி (மகா சிவராத்திரி),யோக சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, நித்யசிவராத்திரி, மாத சிவராத்திரி என ஐந்து வகை உண்டு.

மாக சிவராத்திரி : மாசி மாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய நாள் மாக சிவராத்திரியாகும். இதனை வருட சிவராத்திரி, மகா சிவராத்திரி என்றும் கூறுவர்.

யோக சிவராத்திரி : சோம வாரத்தன்று சூரிய உதயம் முதல் பகல் இரவு அறுபது நாழிகையும் அமாவாசை இருப்பின் அது யோக சிவராத்திரியாம். இதுபோல் சோம வாரத்தில் இரவில் எந்த நாழிகையிலும் தேய்பிறைச் சதுர்த்தசி வரும் நாள் யோக சிவராத்திரி எனப்படும். இத்தகைய யோக சிவராத்திரியில் விரதமிருப்பின் மூன்று கோடி

சிவராத்திரியின் விரதமிருந்த பலனைப் பெறுவர் என்பர்.

**நித்திய சிவராத்திரி :** வருடத்தின் பன்னிரண்டு மாதங்களிலும் வரும் தேய்பிறை வளர்பிறைகளில் சதுர்த்தசி கூடிய இருபத்து நான்கு நாட்களும் நித்திய சிவராத்திரியாம்.

**பட்ச சிவராத்திரி :** தை மாதத்தில் தேய்பிறைப் பிரதமையன்று தொடங்கிப் பதின்மூன்று நாள் வரையில் பிரதி தினம் நியமத்துடன் ஒரு வேளை உணவு உண்டு, பதினன்காம் நாள் சதுர்த்தசியன்று விதிப்படி விரதம் நோற்பது பட்ச சிவராத்திரியாம்.

**மாத சிவராத்திரி :**

மாசி மாதம் தேய்பிறைச் சதுர்த்தசி.
பங்குனி மாதத்து வளர்பிறைத் திருதீயை.
சித்திரை மாதத்துத் தேய்பிறை அஷ்டமி.
வைகாசி மாதத்து வளர்பிறை அஷ்டமி.
ஆனி மாதத்து வளர்பிறைச் சதுர்த்தசி.
ஆடி மாதத்துத் தேய்பிறை பஞ்சமி.
ஆவணி மாதத்து வளர்பிறை அட்டமி.
புரட்டாசி மாதத்து வளர்பிறைத் திரயோதசி.
ஐப்பசி மாதத்து வளர்பிறைத் துவாதசி.
கார்த்திகை மாதத்து வளர்பிறைச் சப்தமி
தேய்பிறை அஷ்டமி.
மார்கழி மாதத்து வளர்பிறைச் சதுர்த்தசி
தேய்பிறை சதுர்த்தசி.

தை மாதத்து வளர்பிறைத் திருதீயை ஆகிய திதிகள் கூடிய பதினன்கு நாட்களும் மாத சிவராத்திரியாகும்.

மார்கழி மாதத்தில் வளர்பிறைச் சதுர்த்தசி, திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடி வந்தாலும், மாசி மாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசி செவ்வாய்க்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமையில் கூடிவந்தாலும் மிகவும் விசேஷமாகும். மேற்கூறிய சிவராத்திரிகளில் விரதம் இருப்பது மிகவும் விசேடமாகும். இவ்வாறு அனுஷ்டிக்க முடியாவிட்டால் இவற்றுள் ஒன்றையேனும் தவருமல் அனுஷ்டிக்க வேண்டும்.

மேலும் இந்த சிவராத்திரியில், உத்தமத்திலுத்தமச் சிவராத்திரி, உத்தம சிவராத்திரி, மத்திமா சிவராத்திரி, அதம சிவராத்திரி என்று நால்வகை உண்டு.

சிவராத்திரி தினத்தின் முன்னுள் ஒருவேளை உண்டு பின் மறுநாள் சிவராத்திரியன்று முழு உபவாசம் இருந்து, மாலையில் சிவாலயம் சென்று, சிவபெருமானை மலர்களால் அர்ச்சித்துப் பின் இரவு நான்கு யாமமும் நித்திரையின்றிச் சிவபூசை செய்தல் வேண்டும். நான்கு யாமத்திலும் அந்த அந்தக் காலத்தில் அபிடேகம் அர்ச்சனை செய்து பூசித்தல் மிகவும் உத்தமம். ஒரு காலத்தில் சேர்த்துச் செய்வது மத்திமம்.



சிவ பூசை இல்லாதவர்கள் நித்திரையின்றி பஞ்சாட்சர ஜபம் செய்து, சிவபுராணம் சிரவணம் செய்து நான்கு யாமத்திலும் சிவாலய தரிசனம் செய்தல் வேண்டும். இவ்வாறு செய்யமுடியாதவர்கள் இரவு பதினன்கு நாழிகைக்குமேல் ஒரு முகூர்த்தம் 'லிங்கோற்பவ காலம்' என்னும் உத்தமக் காலத்தில் மட்டுமாயினும் விழித்திருந்து சிவாலயம் சென்று சிவதரிசனம் செய்தல் வேண்டும்.

தனியாகச் சிவபூசை, அபிஷேகம், அர்ச்சனை செய்ய இயலாதவர்கள், சிவாலயத்தில் சிவபெருமானுக்கு நடக்கும் சிவபூசையில் தவருமல் கலந்துகொள்ள வேண்டும்.

இந்த விரத நாளைப் பிரம்ம சொருபம், மகாதபசு, பிரகாசம் யசஸு, சகல புவனம், சத்தியம் எனவும் கூறுவர்.

'திரயோதசி திதி அம்பிகையின் வடிவமாகும். சதுர்த்தசி திதி சிவஸ்ருபமாகும். திரயோதசி சதுர்த்தசிதிதி ஆகிய இரண்டின் சேர்க்கை சிவயோகத்தைக் குறிக்கிறது' என்று சுப்பிரபேதாகமம் கூறுகிறது.

## அபிடேக அர்ச்சனை அலங்கார விதிமுறை

| யாமம் | அபிடேகம் | பூச்சு | அர்ச்சனை மலர்கள் | நிவேதனம் | பாராயணம் |
|---|---|---|---|---|---|
| முதல் யாமம் | பஞ்சகவ்யம் (பால், தயிர், நெய், கோசலம், கோமயம்) | சந்தனக் குழம்பு | வில்வம் அல்லது தாமரை | பச்சைப் பயிறு பொங்கல் | ரிக் வேதம் |
| இரண்டாம் யாமம் | பஞ்சாமிர்தம் (சர்க்கரை, தேன், பால், நெய் தயிர் கலந்த ரஸ பஞ்சாமிர்தம்) | அகிற் குழம்பு | தாமரை அல்லது துளசி | பாயசம் | யசுர் வேதம் |
| மூன்றாம் யாமம் | கொம்புத்தேன் | அரைத்த பச்சை கற்பூரம் | ஜாதிமுல்லை அல்லது வில்வம் | எள்ளன்னம் | சாமவேதம் |
| நான்காம் யாமம் | கருப்பஞ்சாறு | அரைத்த குங்குமப்பூ | நந்தியாவர்த்தம் அல்லது நீலோற்பலம் | சுத்தன்னம் | அதர்வ வேதம் |

மேற்கூறியவாறு சிவராத்திரி இரவில் அபிடேக அர்ச்சனை செய்து பூசித்து, மறுநாள் காலை சூரியன் உதித்து ஆறு நாழிகைக்குள் பாரணம் செய்தல் வேண்டும். பசி தாள முடியாதவர்கள் இரவில் முதல் யாமத்தில் சிறிது நீராவது பாலாவது பழமாவது புசிக்கலாம். பாரணை செய்தபின் பகற்பொழுது கண்துயிலாமல் சிவபுராணம் படித்தேனும் கேட்டேனும் பொழுதைப் போக்கிப் பின் இரவு நித்திரை செய்தல் வேண்டும்.

'இவ்வாறு இருபத்திநான்கு வருடம் விரதமிருந்து பின் கோதானம், பூதானம், சுவர்ண தானம் செய்து இந்த விரதத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் இவ்வாறு செய்தால் அறம் பெருகிச் செல்வம் வளரும். இவர்களின் மூவேழ தலைமுறையினரும் தப்பாமல் முக்தியில சேர்வர்' என்று சிவராத்திரி புராணம் கூறுகிறது.

பஞ்சமா பாதகம் செய்த கொடியவனும் சிவராத்திரி தினத்தில் பரமேச்வரனைத் தரிசித்துச் சிவசாருப்பியம் பெற்ற வரலாறுகள் உண்டு.

இன்று சிவராத்திரி என்றும் சிவபெருமானைத் தரிசித்தால் புண்ணியம் என்றும் தெரிந்து கொள்ளாமல் அபுத்திபூர்வமாய் நிஷ்காமியத்துடன் சிவராத்திரிதின விஷேசத்தால் அன்று இரவு சிவதரிசனம் செய்த காரணத்தால், தீப்பொறிபட்டுப் பஞ்சுப் பொதிகள் அழிவதுபோல், பாவம் தொலைந்து சிவகதி அடைவர். மேலும். நெருப்பானது தெரிந்து தொட்டாலும் தெரியாமல் தொட்டாலும் சுடுவது போலவும் விஷம் தெரிந்து புசித்தாலும் தெரியாமல் புசித்தாலும் புசித்தோரைக் கொல்வது போலவும், புண்ணிய காலங்களில் தெரிந்து உபாசனை செய்தாலும் தெரியாமல் உபாசனை செய்தாலும் கால விசேஷத்தால் ஒரே பலனை நல்கும்.

இப்படிப் பலனடைந்த சுகுமாரன் என்ற அந்தணனும் அங்குலன் என்ற வேடனும், ஸௌமினி என்ற புலைச்சியும் சிவராத்திரி என்று தெரியாதானலும் தற்செயலாக அவர்கள் பட்டினி கிடந்து கண்விழித்து வில்வத்தைச் சிவலிங்கத்திற்கு இட்டதால் அவர்கள் சிவகதி அடைந்தாகப் புராணங்கள் கூறுகிறது.

ஆகவே இந்த உயர்ந்த சிவராத்திரி விரதத்தை அனைவரும் அனுட்டித்து நற்கதி பெற ஸ்ரீ காசிவிசுவநாதரை வேண்டி நிற்போம்.

# பரமார்த்தப் பிரசங்கம்

## சுவாமி விரஜானந்தர்

தூய்மையானது கைலையங்கிரி போன்றது. எப்போதும் அங்கே சாந்தம், சிவம், சுந்தரம் என்பன பனியாக மண்டி உறைந்து கிடக்கின்றன.

இறைவன் தூய உள்ளத்திலேயே பிரகாசிக்கிறுன். மகத்தான ஆன்மிக உண்மைகள் தூய உள்ளத்திலேயே உதித்தெழுகின்றன.

பல யுகங்களுக்கு முன்னமே நம்முடைய யோகிகளும் ரிஷிகளும் ஆச்சரியமான பல பிரபஞ்ச உண்மைகளைக் கண்டுபிடித்தனர். பரமாணுபற்றியும் பஞ்ச தன்மாத்திரைகள் பற்றியும் உடலைப்பற்றியும் ஆன உண்மைகளைக் கண்டுபிடித்தனர். உடலின் உள்ளே நடைபெறும் இயக்கங்களைக் கண்டறிந்தனர். அதாவது உடலுடன் தொடர்பு கொண்ட ஸ்தூலம், சூட்சுமம், காரணம் ஆகிய பகுதிகளை ஆராய்ந்தனர். இவற்றின் போக்குகள் தமக்கு உரிய வழியை விட்டுப் பிசகினுல் எத்தகைய நோய்கள் தோன்றுகின்றன என்பதைத் தெரிந்துகொண்டனர். இத்துடன் நட்சத்திரக் கூட்டங்களின் போக்குப் பற்றியும் சக்தி பற்றியும் பதார்த்த விஞ்ஞானம் பற்றியும் சோதிட சாஸ்திரம் முதலான விஷயங்கள் பற்றியும் சோதித்தறிந்தனர்.

அவ்விதம் நம்முடைய யோகிகளும் ரிஷிகளும் கண்டதையெல்லாம் நவீன விஞ்ஞான ஆராய்ச்சியும் ஒப்புக்கொள்கிறது.

இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள நமது ரிஷிகளுக்கு எப்படிச் சாத்தியமாயிற்று? தூரதிருஷ்டிக் கண்ணுடி, அணுவையும் பெரிதுபடுத்திக் காட்டும் கண்ணுடி முதலியவை போன்ற விஞ்ஞானக் கருவிகள் அவர்களிடம் இருக்கவில்லை. நவீன யந்திர சாதனங்களுடன் கூடிய பரிசோதனைகளும் அவர்களுக்குக் கிடையா. என்ருலும் அவர்கள் சூட்சுமமாகவும் ரகசியமாகவும் இருக்கும் தத்துவங்களைக் கண்டுபிடித்தனர். அல்லது அந்தத் தத்துவங்கள் அவர்களுக்குத் தாமே பிரத்தியட்சமாயின. இது எவ்வாறு சாத்தியமாயிற்று? தம்முடைய பரிசுத்தமான மனங்களின் அந்தர்திருஷ்டியைத் தாம் கண்டுபிடிக்க விரும்பிய பிரச்னைகளின்மீது ஒருமுகப்படுத்திச் செலுத்தியதுமே அவர்களுக்கு இதுவெல்லாம் சாத்தியமாயிற்று. இன்றைய நாகரீக உலகின் பேரறிஞர்களுக்கு இது பெரிதும் ஆச்சரியமாக இருக்கிறது.

* * *

பராபக்தியும் ஞானமும் மோட்சமும் பெறுவதற்கு உனக்கு ஆசையிருந்தால், உள்ளும் புறமும் நீ பரிசுத்தமாக இருக்க வேண்டும். உடலும் சரி, அந்தக்கரணமும் சரி, மாசின்றியும் தூய்மை நிறைந்தும் இருக்க வேண்டும். இதற்கு உரிய வழி, காமினி காஞ்சனத் தியாகமே ஆகும் என்று குருதேவர் சொல்வது வழக்கம். இந்தத் தியாகம் மிகவும் கடினமானதுதான்; என்ருலும் அறவே இயலாத ஒன்றல்ல.

ஆத்ம சாட்சாத்காரத்திற்கு முழு உள்ளத்துடன் முயற்சி செய்து வர வேண்டும். தொடர்ந்த பயிற்சி, தீவிரமான சுய முயற்சி (புருஷகாரம்), கடும் ஆத்மசாதனை—இவை எதையும் சாத்தியமாக்கிவிடுகின்றன.

ஆனல் இறைவனின் திருவருள் இல்லாத நிலையில் இந்தச் சுயமுயற்சியைக்கூட ஒருவனல் செய்ய இயலாது. "வானத்தில் பறக்கவிடப்படும் ஆயிரக்கணக்கான பட்டங்களில் அபூர்வமாக ஒன்றோ இரண்டோதாம் கயிறு அறுந்து விடுதலையாகின்றன ; அது போன்று லட்சோபலட்சம் மக்களில் அபூர்வமாக இரண்டொருவர்தாம் பந்தங்களிடிருந்து விடுபட்டு முக்தி அடைகிறார்கள்" என்பது உண்மையே ஆகும். ஆனல் அந்த இரண்டொரு பட்டங்களில் நீயும் ஒருவனாக இருக்க முடியாது என்று யார் சொல்ல முடியும்? ஆதலால் இந்த நம்பிக்கையை உன்னுள் கொண்டு நீ முன்னேறிச் செல்.

* * *

நாம் தெரிந்துகொண்டே பாவம் செய்யும் பாவிகளாக இருக்கிறோம். நாம் செய்வது பாவம் என்று தெரிந்திருந்தும், பாவத்தினல் விளைவது துன்பம்தான் என்பதை அறிந்திருந்தும், நாம் பாவம் செய்வதைத் தவிர்ப்பதில்லை. ஆனல் பாவம் செய்வதைப் பற்றி முதலைக் கண்ணீர் வடிக்கிறோம். முட்டாள்தனத்தாலோ, அறியாமையினலோ, மௌட்யம் காரணமாகவோ பாவம் செய்துவிடுகிறோம் என்று பாசாங்கு செய்கிறோம்.

வேண்டுமென்றே பாவம் செய்கிறவர்கள் உண்மையில் நாஸ்திகர்களே ஆவர். பாவிகளுக்கு முக்தி பெற வழி உண்டு ; ஆனல் வேண்டுமென்றே பாவம் செய்கிறவர்களுக்கு விமோசனம் கிடையாது. தூங்குவதாக பாசாங்கு செய்கிறவனை யார்தான் எழுப்ப முடியும்? ஆன்மிக வாழ்க்கை என்பது குழந்தை விளையாட்டா என்ன? மனமும் வாயும் - சொல்லும் செயலும் - ஒன்றுகவே ஆகும் வரையிலும், கள்ளங்கபடமற்ற சரளத்தன்மை உள்ளத்தில் நிறையும் வரையிலும், சிரத்தை வடிவினனாக ஆகும் வரையிலும் பெறுவதற்கு அரிய எதையும் ஆன்மிக வாழ்க்கையில் ஒருவன் பெறவே இயலாது.

* * *

குறுக்குத்தனமான தந்திரத்தின் மூலமோ வஞ்சகத்தின் மூலமோ மகத்தான காரியம் எதையும் சாதித்துவிட முடியாது. வெளியில் பகட்டாகக் காட்டிக்கொள்வதனலும் பெரிய பெரிய சொற்களைப் பிரயோகித்துப் பேசுவதனலும் உலக மக்களை ஏமாற்றி விடலாம். ஆனல் கபட நடத்தையும் ஏமாற்றுத்தனமும் ஆண்டவனிடம் பலிக்க மாட்டா. கபடமாக நடந்துகொள்கிறவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கிறார்கள். அவர்கள் மேற்கொள்ளும் ஜபம், தியானம், பிரார்த்தனை போன்ற ஆத்மசாதனைகளெல்லாம் பயனற்ற உழைப்பே ஆகும். அவர்களின் அந்த உழைப்பு, ஓட்டைப் பானையில் நீர் ஊற்றுவது போன்றதே ஆகும். தொடர்ந்து விடாமல் உழைப்பதனலும் முழு அளவில் அமைந்த தியாகத்தினலுமே மகத்தான காரியங்கள் நிறைவேற்றப்படுகின்றன; சிறந்த ஒழுக்கமும் ஒருவனிடம் உருவாகிறது.

* * *

## எறும்பும் யானையும்

"கடவுள் சம்பந்தமான என் ஆன்மிக அனுபவங்களை என் நண்பனுக்கு நான் கொடுக்க இயலுமா?" என்று ஓர் அன்பர் காந்தியடிகளைக் கேட்டார்.

"ஓர் எறும்பு தன் அறிவையும் அனுபவத்தையும் ஒரு யானைக்கு வழங்க முடியுமா? அதே போல் யானை எறும்புக்கு வழங்க இயலுமா? உனது நண்பனுக்கு நல்ல அறிவையும் தெளிவையும் அருளும்படி ஆண்டவனை பிரார்த்தனை செய்" என்றார் காந்தியடிகள்.




# உள்ளத் தூய்மை

'வால்மீகி'

எளிமைக்கும் உள்ளத் தூய்மைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எளிய வாழ்க்கைதான் உள்ளத்தில் தூய்மையை உருவாக்குகிறது. உலகில் எந்தப் பெரிய சமயத்தை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் சரி, இறைவனை அடையும் இலட்சியமுடையவர்களாயிருந்த பெரியோர் யாவரும் ஆசாபாசங்களையும் ஆடம்பரத்தையும் துறந்து, எளிய வாழ்க்கையை நடத்தியவர்கள். ஆகவேதான் உள்ளத் தூய்மை பெற்ற அவர்களது பக்கத்திலே இறைவன் என்றைக்கும் இருந்தான். அது மட்டுமல்ல; அவர்களுடைய நாமமும் சிரஞ்சீவியாக இன்றைக்கும் நம்மிடையே இருந்து வருகிறது.

ஹஜ்ரத் அபூ பக்கர் அவர்கள் தொழிலிலே ஒரு ஜவுளி வியாபாரி. அவருடைய நாணயமும் நல்லொழுக்கமும் தெய்வ பக்தியும் கலீபா என்னும் ஜனாதிபதிப் பதவியை அவருக்கு ஈட்டிக் கொடுத்தது. பதவிக்கு வந்த பிறகும்கூட அவர் ஜவுளிகளைச் சுமந்து கொண்டு போய் வியாபாரம் செய்வதை விடவில்லை. அதிலிருந்து கிடைத்த சொற்பத் தொகையைக் கொண்டே தமது சொந்த வாழ்க்கையை அவர் நடத்தி வந்தார். இதை அறிந்ததும் அவருக்குப் பொது நிதியிலிருந்து உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது.

ஒரு நாள் அவருடைய மனைவியார் ஓர் இனிப்புப் பலகாரம் தின்ன ஆசை கொண்டார். அதற்காகக் குடும்பச் செலவிற்கு ஹஜ்ரத் அபூ பக்கர் அவர்கள் கொடுக்கும் பணத்திலே ஒரு சிறு தொகையை நாள்தோறும் மிச்சம் பிடித்து வந்தார். சில தினங்களுக்குப் பின்னர் தாம் விரும்பிய இனிப்புத் தின்பண்டம் தயாரிக்கப் போதிய அளவு

பணம் சேர்ந்தது. இதை அவர் கணவரிடம் சொன்னபொழுது அவர் என்ன சொன்னர் தெரியுமா?

"நீ இப்பொழுது சேர்த்து வைத்திருக்கும் தொகை இத்தனை நாளாகப் பொதுநிதியிலிருந்து நாம் நமது தேவைக்குமேல் அதிகமாகப் பெற்று வந்த தொகையைக் குறிக்கிறது" என்று ஹஜ்ரத் அபூ பக்கர் அவர்கள் தெரிவித்து, மீதப்படுத்தியிருந்த தொகையைப் பொதுநிதியிலே சேர்த்துவிட்டார்கள். அவர் அம்மட்டோடு நிற்கவில்லை; தமது மனைவியார் மீதப்படுத்திய அளவிற்குத் தமது உபகாரச் சம்பளத்தையும் அடுத்த மாதத்திலிருந்து குறைத்துக் கொண்டார்கள்.

ஹஜ்ரத் அபூ பக்கர் அவர்கள் இஸ்லாத்தின் முதலாவது கலீபாவாக நியமனம் பெற்ருர். மரணத்தறுவாயில் இருந்தபொழுது தமது அருமைப் புதல்வியார் ஆயிஷாநாயகியை அருகில் அழைத்து, "இதோ பார், அம்மா! நான்மரணமடைந்த பிறகு என் தேவைக்காகப் பொது நிதியிலிருந்து நான் பெற்ற பொருள்களையெல்லாம் எனக்கு அடுத்து வரும் கலீபாவிடம் ஒப்படைத்து விடவேண்டும். அவற்றில் ஒன்றையும் நீ தீண்டக்கூடாது" என்று உத்தரவிட்டார்.

அவர் மரணமடைந்தபொழுது அவருடைய சொந்தச் சொத்து என்று ஒரு தங்க நாணயமோ, வெள்ளி நாணயமோகூட இல்லை. பால் கொடுக்கும் ஒட்டகம், தண்ணீர் குடிக்கும் பாத்திரம் ஒன்று, ஒரு படுக்கை விரிப்பு ஆகியவை மட்டுமே அவரிடம் இருந்தன. அவற்றையும் அவருடைய புதல்வியார் தந்தையின் கட்டளைப்படி அடுத்த கலீபாவிடம் ஒப்படைத்துவிட்டார். என்னே அவருடைய மனத்தூய்மை! என்னே அவருடைய கடமையுணர்ச்சியும் நாணயமும்! இப்படிப்பட்ட மகானை மக்கள்குலம் எப்படி மறக்க முடியும்?

---

எருது நினைத்தபடி வண்டியோட்டி பொதியேற்றமாட்டான் அது போல ஆன்மா நினைக்கிறபடி, ஈசன் வினைகூட்டமாட்டான்.

—ஞானரத்னவளி

விரோதி தனக்கு அனுகூலமாயிருந்தாலும் அவனுடன் சிநேகிக்கலாகாது.

தண்ணீர் வெந்நீரானலும் நெருப்பை அவிக்கும். ஆகையால் எது தக்கதோ அதைச் செய்யவேண்டும்.

தண்ணீரில் வண்டியும், பூமியின் மேல் கப்பலும் செல்லுமா?

இதனல் விரோதிகளிடம் நம்பிக்கை வைக்கலாகாது.

—பஞ்சதந்திரம்

# திருவடியின் ஆற்றல்

கி. வா. ஜகந்நாதன்

காரைக்காலம்மையார் இப்போது இறைவன் திருவடிப் பெருமையை நினைத்துப் பார்க்கிறார். அது அடியவர்களுக்கு இன்ப வீடாக இருப்பது. அல்லாதவர்களின் கொடுமையை அடக்கும் ஆற்றலுடையது. அந்தப் பராக்கிரமத்தை எண்ணுகிறார்.

திருவின் கேள்வன் திருமால். அவன் திருவுடையவன். அதனால் சிறந்த தகுதியுடையவன். அவன் இறைவனுடைய திருவடியைக் காணமுடியாது. உலகத்தைப் படைக்கும் பிரம தேவனும் காண்பதற்கரியது அந்த அடி.

சுந்தரத் திருவடிகளைக் காண வேண்டுமென்று திருமால் வராக உருவெடுத்து முயன்றான். உலகத்தை அகழ்ந்து போனான். அவனால் காண முடியவில்லை. அவனால் காண முடியாதபோது அவனைக் காட்டிலும் ஆற்றல் குறைந்த அயன் எங்கே காணப் போகிறான்?

அவற்றைக் காண வேண்டும் என்ற அவாவினால் எவ்வளவோ முயன்று பார்த்தும் அவர்களால் முடியவில்லையாதலால், "எம் பெருமானே! உன் திருவடியைக் காணலாம் என்ற அகந்தையோடு முயன்றோம். எங்கள் ஆற்றலுக்கு அகப்பட்டவை அல்ல அவை என்பதை உணர்ந்தோம். எங்கள் அகந்தையைப் பொறுத்தருள வேண்டும்" என்று பலவாறு சொல்லி அவர்கள் அரற்றினார்கள். பிறகு இறைவன் அவர்கள் கண் காணும்படி, சோதி வடிவத்தை மாற்றி அவர்கள் முன் நின்றான். அப்போது வீழ்ந்து பணிந்து மகிழ்தார்கள்; அந்தத் திருவடியின் பெருமையைப் புகழ்ந்து துதித்தார்கள்.

திருத்தக்க
மால் அயனும் காணாது
அரற்றி, மகிழ்ந்து ஏத்த.

காணாமல் வருந்திய அவர்களுக்கு இறைவனே இரங்கித் தன் திருவடியைக் காட்டினான். முதலில் வருந்தியதனால் அவற்றின் அருமைப்பாட்டை அறிந்த அவர்கள், இறைவன் கருணையினால் அந்தத் திருவடிகளின் தரிசனம் கிடைத்தபோது அவர்கள் உள்ளம் மகிழ்ந்தார்கள்; தம் அகந்தையை மறந்து இறைவன் கருணை காட்டினானே என்று எண்ணி ஏத்தினார்கள்.

குழந்தை தன்னைத் தேடட்டும் என்று அன்னை மறைந்து கொள்ளுகிறாள். அந்தக் குழந்தை தாயை எங்கெங்கோ தேடுகிறது. தேடித் தேடி அலுத்துப் போய் அரற்றுகிறது. அப்போது தாய் வெளிப்பட்டுக் குழந்தையின் முன் நிற்கிறாள். தேடி வருந்திய குழந்தைக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டாகிறது.

அத்தகைய மகிழ்ச்சி மாலுக்கும் அயனுக்கும் உண்டாயிற்று. அந்த மகிழ்ச்சியின் விளைவாக அவர்கள் இறைவனை ஏத்தித் துதித்தார்கள்.

அவர்கள் ஏத்தும்படி விளங்கும் இறைவன் திருவடி, காலனையே உதைத்தது. அவன் மிடுக்குடன் மார்க்கண்டேயனைப் பிடிக்க வந்தான். தன் பாசத்தை அவன்மேல் வீசினான். சிவலிங்கப் பெருமானையும் சேர்த்துப் பாசத்தால் அகப்படுத்தினான். அப்போது அந்தக் காலனுடைய ஆற்றல் தோற்றுப் போகும்படி அவனை உதைத்தது இறைவன் திருவடி. அது காலஜயம் கொண்ட திருவடி.

அத்தகைய பராக்கிரமத்தைச் செய்த திருவடியே மற்றொரு செயலையும் செய்தது.

இராவணன் தன் விமானத்தில் ஏறி வரும்போது அந்த விமானம் கைலாசத்தின் மேல்

சென்றது. அப்பால் அதனால் நகர முடிய வில்லை. இறைவனுடைய இடமாகிய அதை மீறி அதனால் செல்ல முடியவில்லை. தன் விமானப் பயணத்துக்குத் தடையாக இருந்த கைலாசத்தைத் தூக்கி எறிந்து விடவேண்டு மென்று எண்ணினான் அவன்.

போகும் வழியில் ஏதேனும் கல் தடுத்தால் அதைத் தூக்கி எறிகிறோமே; அது போலச் செய்து விடலாம் என்று எண்ணினான். விமானத்திலிருந்து கீழிறங்கினான். கைலாச மலையைத் தன் தோள்வலியால் தூக்கி எறிந்து விடலாம் என்ற செருக்கு உண்டாக தன்னுடைய இருபது திண்டோள்களையும்



கொண்டு அதைத் தூக்க முயன்றான். மலை சிறிதே நகர்ந்தது. கீழே தோள்களைப் புகுத்தி மேலும் தூக்கலானான்.

செருக்கினால் வெற்பு எடுத்த
திண்தோள் அரக்கனையும்.

அப்போது இறைவன் பார்த்தான். தன் திருவடியை மலைமேல் சிறிதே அழுந்த ஊன்றினான். பொறியிலே சிக்கிய எலியைப் போல இராவணன் நசுங்கிப் போனான். பிறகு தோள்களில் ஒன்றையே வீணையாக வைத்துச் சாமகானம் பாட இறைவன் அவனுக்கு அருள் சுரந்தான்.

இராவணன் மலையை எடுத்தபோது அவ் விடத்தில் அந்தத் திருவடிகள் அவனை நசுக்கின. காலனையே உதைத்து வென்ற அந்தத் திருவடிகளுக்கு இது எம்மாத்திரம்? இராவணனுடைய செருக்கை அழித்து நின்றன அத்திருவடிகள்.

அரக்கனையும் முன் நின்று அடர்த்த.

காலனை உதைத்து வென்ற பராக்கிரமத் தையும் செருக்குற்ற இராவணனை அடர்த்த ஆற்றலையும் ஒருங்கே இணைத்துச் சொல்கிறார் அம்மையார்.

செருக்கினால் வெற்பு எடுத்த
எத்தனையோ திண்தோள்
அரக்கனையும் முன் நின்று
அடர்த்த;— திருத்தக்க
மால் அயனும் காணாது
அரற்றி, மகிழ்ந்து ஏத்தக்
காலனையும் வென்றுதைத்த கால்.

திருவினால் தகுதி பெற்ற திருமாலும் அயனும் காணாமல் அரற்றி, பின்பு இறைவன் அருள் செய்ததனால் மகிழ்ந்து துதிபாட, யாராலும் வெல்லற்கரிய காலனையும் உதைத்து வென்ற திருவடிகள், நம்மைவிட வலியவர் இல்லை என்ற கர்வத்தால் கைலாச மலையைத் தூக்கிய பல திண்ணிய தோள்களை யுடைய அரக்கனாகிய இராவணனையும் முன்னே நின்று அமுக்கின.

[தனக்குப் பல திண்ணிய தோள்கள் இருப் பதனால் இராவணன், 'இது நமக்கு எம்மாத் திரம்?' என்ற செருக்கை அடைந்தான். அவன் திண்ணிய தோள்கள் இருபது. அவற்றை வீணே யார் எண்ணிக் கொண் டிருப்பார்கள் என்ற எண்ணத்தால், 'எத்தனையோ திண்டோள்' என்றார். 'அவை எத்தனையாக இருந்தால்தான் என்ன? அத்தனையையும் இறைவன் திருவடிகள் அழுந்திவிட்டன' என்றார்.

அரக்கனையும்: இறந்தது தழீஇய எச்சவும்மை, எண்ணும்மையாகவும் கொள்ளலாம். உயர்வு சிறப்பும்மையாகவும் கொள்ள இடம் உண்டு. முன் நின்று-அடர்த்த; இரண்டுதிருவடிகளையும் எண்ணிப் பன்மையால் சொன்னார். மாலும் அயனும் என்று உம்மையை மாலுக்கும் கூட்டுக; மாலோடு சேர்ந்த அயனும் என்று கொண்டு உயர்வு சிறப்பும்மையாகக் கொள்வதும் பொருந்தும்.

காணாமையால் முதலில் அரற்றினார்கள்; பிறகு இறைவன் திருவருளைப் பெற்று மகிழ்ந்து ஏத்தினார்கள்.

காலனையும்: எதிரது தழீஇய எச்சவும்மை; உயர்வு சிறப்பாகவும் கொள்ளலாம். வென்று உதைத்த என்பவற்றை உதைத்து வென்ற என்று மாற்றிப் பொருள் செய்க. உதைத்தகால் அடர்த்த என்று முடிக்க.

காணாது அரற்றி மகிழ்ந்து ஏத்த, வென்று உதைத்த கால் அடர்த்த என்று வினைமுடிவு கொள்க.

ஏத்தியது ஒரு சமயம்; உதைத்தது வேறு ஒரு சமயம்; அடர்த்தது பின் ஒரு சமயம். இந்த மூன்றும் திருவடிகளின் செயல்களாதலின் இணைத்துச் சொன்னார்.]

அற்புதத் திருவந்தாதியில் 80-ஆம் பாட்டாக அமைந்தது இது.

# கர்மயோகம்

ஆத்ரேய சுந்தரநாராயணன்

இந்துமதமும் அதன் பிரிவுகளாகக் கருதப் படும் ஜைனமும் பௌத்தமும் ஆத்மாவுக்குக் கர்ம பலனால் மறுபிறப்பு உண்டு என்று கூறுகின்றன.

''ஒருவன் வசதியான குடும்பத்தில் பிறந்து சுகப்படுவதும், மற்றவன ஏழைக் குடும்பத்தில் பிறந்து கஷ்டப்படுவதும் ஏன்? கடவுளுக்கு ஏன் இந்த வஞ்சகம்?'' என்று கேட்கலாம்.

இந்த வேறுபாட்டிற்கு முன் ஜன்மத்தில் ஆத்மாவுக்குக் கிடைத்த கர்ம பலனே காரணம். கடவுளுக்கு வஞ்சகம் இல்லை.

மறுபிறப்பு உண்டு என்பதற்கு வேறு எடுத்துக்காட்டும் கூறலாம். சிறுவயதிலேயே சிலர் எவ்வாறு மேதையாக விளங்க முடிகிறது? மூன்று வயதுச் சிறுவன் சங்கீதக் கச்சேரி செய்ததை நேயர்கள் கேட்டிருக்கலாம். சிலர் முன்ஜன்ம அனுபவங்களைக் கூற முடிகிறது.

கிழிந்த சட்டையைக் கழற்றிவிட்டு வேறு புதிய சட்டையை அணிவது போல், ஜீவன் நைந்த உடலைவிட்டு வேறு உடலில் புகுந்து மறு ஜன்மம் எடுக்கிறான். அப்பொழுது பழைய அனுபவமும் அவனுக்கு உதவுகிறது. தனது கர்மத்திற்குத் தக்க பல ஜன்மங்களை எடுத்து இறுதியில் பூரணஞானம் பெற்று முக்தி அல்லது பிறவாமை பெறுகிறான்.

பகுத்தறிவு பெற்ற மானிட ஜன்மத்திலேயேதான் முக்தி சாதனங்களைப் பயன் படுத்த முடியும்.

கர்மயோகம், பக்தியோகம், ராஜயோகம், ஞானயோகம், சரணாகதி என்பன முக்திக்குச் சாதனங்கள்.

பக்தியே சிறந்த சாதனம் என்றார் பகவத் ராமானுஜர். ஞானமே சிறந்தது என்றார் பகவத்பாதர் ஆதிசங்கரர். ஆனால் பக்தியும் ஞானமும் பெற நல்ல கர்மாக்களைச் செய்து

மனதைத் தூய்மை பெறச் செய்வது அவசியம் என்றனர் அவர்களும்.

கர்மம் என்றால் என்ன? கர்மம் என்றால் செயல், வினை என்று பொருள். அது கர்மத்தினல் வினையும் பயனையும் குறிக்கும்.

ஒரு வினைக்கு எப்போதும் ஒரு பிரதிவினை அல்லது பயன் உண்டு என்பது பௌதிக விதி. பயன் கெட்டதாகவோ நல்லதாகவோ இருப்பது செய்யும் வினையைப் பொறுத்தது. 'தினை விதைத்தால் தினை அறுப்பர்; வினை விதைத்தால் வினை அறுப்பர்' என்பது முதுரை.



நல்ல கர்மங்களைச் செய்தால் உயர்ந்த பிறப்புக்களும் வாழ்க்கையில் இன்பமும் கிட்டும்; முக்தி பெறவும் சாதனமாக அமையும்.

கர்மங்கள் பலப்பல. அவை நித்திய, நைமித்திக, காம்யகர்மங்கள் எனப்படும்.

ஸ்நானம், சந்தியாவந்தனம், தேவ ஆராதனம், புராண இதிகாசங்களைக் கேட்டலும் கூறுதலும், தானம், தவம், வேள்வி முதலியவை நித்திய கர்மங்கள்.

நைமித்திக கர்மங்கள் என்பவை, விசேட தினங்களில் செய்யப்படும். பித்ரு தர்ப்பணம் முதலியவை.

காம்யகர்மங்கள் வாழ்வில் துன்பத்தை விலக்கவும், இன்பத்தைப் பெறவும் செய்யும் யாகங்கள், சுதர்சன ஹோமம், கணபதி ஹோமம் போன்றவை.

கர்மம், மனம் வாக்குக் காயத்தால் செய்யப்படும். அவற்றின் ஒவ்வொரு வகையிலும் பாவ புண்ணிய மிச்ர கர்மங்கள் உள்ளன. அவ்வாறு செய்யும் பாவமும் புண்ணியமும் கலந்த கர்மங்களிலும் உத்தமம் மத்தியமம் அதமம் என்ற பிரிவுகள் உண்டு.

வினைகளைத் தூண்டுவன ராகம் (ஆசை) துவேஷம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம் (இறுமாப்பு), மாற்சரியம் (பொறாமை), தம்பம், சிரத்தை, பக்தி முதலிய அந்தக்கரண விருத்திகள்.

சில புத்திமான்கள் கருமமே தீமையைப் போல் தள்ளத்தக்கது என்று கூறுவது தவறு. "யஞ்ஞம், தானம், தவம், ஆகிய வடிவத்திலுள்ள கர்மம்விடத் தக்கதன்று" என்கிறார் பகவான். (கீதை 18-5.)

யஞ்ஞம் என்றால் என்ன? இது ஆன்மிகச் செயல்,, மதச்சடங்கு எனப் பொருள்படும். தைத்திரீய ஸம்ஹிதை 'யஞ்ஞமே விஷ்ணு' என்கிறது.

யஞ்ஞம் மனிதனின் ஆன்மிக முன்னேற்றத்திற்கான செயல். இந்தச் செயலே கடவுளுக்கு ஆராதனை ஆகும். தன்னலமற்ற பொதுத் தொண்டும் யஞ்ஞமே.

ஒரு ஜன சமூகம் பொது நலனுக்காகச் சேர்ந்து செயற்படுவதும் யஞ்ஞமே

பஞ்ச மகா யக்ஞங்கள் தினந்தோறும் செய்ய விதிக்கப்பட்டனவை. இவை மனிதன் அறியாமல் செய்யும் பாவங்களை நீக்கும்.

1. தேவயக்ஞம்- பிரார்த்தனையும் வழிபாடும் செய்வது. இதனல் ஒளி, மழை முதலிய பலன்களைப் பெறலாம். 'தெய்வத்திற்குப் பத்திரம் (துளசி), புஷ்பம், நீர், இவற்றால் ஆராதனை செய்து பழம் போன்றவற்றால் நிவேதனம் செய்யாமல் உண்கிறவன் திருடனுக்குச் சமானம். (கீதை 3-12 9-26.)

2. ப்ரம்ம யக்ஞம் அல்லது ரிஷியக்ஞம் என்பது ரிஷிகள் மூலம் வந்த வேதங்களைக் கற்பது, கற்பிப்பது; காலை மாலை மதியம் ரிஷிகளின் மந்திரங்களைக் கூறி, கடவுள் வந்தனம் செய்வது.

3. பிதிர் யக்ஞம்-நமக்கு நன்மை செய்ய விரும்பும் பிதிரர்களுக்கு நீர்விட்டு நமது நன்றியைக் காட்டல். மாதா பிதாவிடம் காட்ட வேண்டிய பக்தியும் கடமையும் இதில் அடங்கும்.

4. ந்ருயக்ஞம் அல்லது மானுஷயக்ஞம் என்பது அதிதிகளை உபசரித்தலும், ஏழைகளுக்கு அன்னமிடலும்.

5. பூதயக்ஞம் என்பது பிராணிகளைக் காப்பாற்றுதலும், உணவில் ஒரு பகுதியைப் பறவை பிராணிகளுக்கு அளித்தலும்.

'தென்புலத்தார் (பிதிரர்), தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் இந்த ஐவரிடமும் செய்ய வேண்டிய கடமையே அறம்' என்கிறார் திருவள்ளுவர்.

யக்ஞம் செய்வதில், 'இது கடமை' என்று நினைத்து, பயனைக் கருதாமல் செய்தால் அது சாத்துவிகம்; பயனை அடைய விரும்பினால் அது ராஜஸம்; முறை தவறியதும், சிரத்தை இல்லாததுமான யக்ஞம் தாமஸம்.

(கீதை, 17-11, 13.)

தெய்வம், குரு பெரியோர் இவர்களுக்கு வணக்கம், சுத்தம், நேர்மை, அஹிம்சை, ஆகியவை உடல் சம்பந்தமான தவம். வேதம் ஓதுதலும், உண்மையான பிரியமான இன்சொல்லும் வாக்கால் செய்யும் தவம். அன்புடைமை, அடக்கம், பரிசுத்த நோக்கம்–இவை மனதால் செய்யும் தவம்.

(கீதை 17–14, 16.)

தகுதியான இடத்தில் தக்க காலத்தில் தகுதியுள்ளவருக்குக் கொடுப்பது சாத்துவிகம். தானம் பயனைக் கருதிக் கொடுத்தால் அது ராஜஸம். தகுதியற்றவர்களுக்குத் தகுதியற்ற இடத்திலும் காலத்திலும் அவமானத்துடன் கொடுப்பது தாமஸம்.

(கீதை 17-20, 22.)

நல்ல கர்மங்கள் யாவை? தனது நேர்மையான முன்னேற்றத்திற்கும், உலக நலனுக்கும், எளியவர் நோயாளிகள் முதலியவர்களின் துன்பத்தைத் துடைக்கும் செயலும் நல்ல கர்மாக்கள்.

தவறியவர்களுக்கு அன்னமிடல், தண்ணீர்ப் பந்தல் அமைத்தல், வேத பாடசாலை அமைத்தல், சமயப் பிரசாரம், இலவசக்கல்விச் சாலை, அநாதைக் குழந்தை விடுதி, ஸ்திரீ சேவா நிலையம் ஆகியவை ஆத்ம முன்னேற்றத்திற்கு உதவுபவை.

கர்மயோகம் என்றால் என்ன? யோகம் என்பது அதிர்ஷ்டம், சங்கம், இணைத்தல் முதலிய பல பொருள்கள் பெறும். இங்கு, கர்மத்தினால் ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணைவது கர்மயோகம் எனப்படும்.

கர்மம் செய்யாமல் ஒருவன் இருக்க முடியாது. கர்மம் செய்யாமல் இருந்தால் உடலைக்கூடப் பராமரிக்க முடியாது. நல்ல கர்மாவினால் புண்ணியமும், கெட்ட கர்மாவினால் பாவமும் ஏற்படுகின்றன. இவற்றின் பலனை அனுபவிக்க மறுபிறவி ஏற்படுகின்றது என்றால், முக்தி அல்லது பிறவாமை கிடைப்பது எங்ஙனம்? இதற்கு உபாயத்தைப் பகவத்கீதையில் பகவான் கூறுகிறார்.

"கருமம் செய்வதில்தான் உனக்கு அதிகாரம்; ஒருபோதும் அதன் பலனில் இல்லை. பயனைக் கருதிக் கர்மம் செய்யாதே. கருமம் செய்யாமலும் இராதே" என்கிறார் பகவான்.

கர்மத்தை ஈஸ்வரப் பிரீதியாகவும் பகவத் ஆக்ஞையாகவும் கருதி, பலனைத் தியாகம் செய்து, பகவானுக்கு அர்ப்பணம் செய்தால் கர்மத்தின் பலன் அண்டாது. இது சாத்துவிகத் தியாகம், நிஷ்காம்ய கர்மம் எனப்படும்.

பலனை எதிர்பாராமல் செய்யும் கர்மம் உலக நலனுக்கு உகந்ததாகவே இருக்க வேண்டும். பலனைப் பகவானுக்கே அர்ப்பணம் செய்தால் அவர் நம்மைக் கவனிப்பார். ஒருவன் எதிர்பார்க்கும் நலனைவிட அதிகமாகவே பகவான் அளிக்கலாம்.

கர்ம பலனைத் தியாகம் செய்கிறவன் கர்ம யோகி. நிஷ்காம்யகர்மத்தால் ஞானம் பிறந்து பகவானிடமும் பாகவதர்களிடமும் பக்தி உண்டாகும். அதனுல் முக்தியும் கிட்டும்.

யோகமுறையே கர்மத்தைத் திறமையாகச் செய்யும் முறை (கீதை 2-50). எந்த நிலையிலும் உள்ளத்தைச் சமத்துவ நிலையில் வைத்திருத்தல் யோகம். (கீதை2-48). பயன் எதுவாயினும் லாபமோ நஷ்டமோ, வெற்றியோ தோல்வியோ எதுவாயினும் சமநிலையில் ஏற்றுக்கொண்டு கருமம் செய்பவன் கர்மயோகி (கீதை 2-38). யோகநிலையில் முன்னேற, கர்மம் கருவியாகும். (கீதை 6-3)

கர்மபயன்கள் மீது எழும் ஆசையை விடுவது எளிதன்று. பயன் கிடைக்கவே சாதாரணமாகக் கர்மம் செய்யப்படுகிறது.

இந்திரியங்களை அடக்கிப் பண ஆசையை அடக்கினுலும், புகழ், மதிப்பு, பெருமை, பதவி இவற்றின் மீதுள்ள ஆசையை அகற்றுவது கடினம். சங்கல்ப வலிமையால் பற்றை நீக்கலாம். உடலே தேராக, ஜீவனே பிரயாணியாக, புத்தியே சாரதியாக, கடிமனமான கடிவாளத்தால் இந்திரியங்களான குதிரைகளை இழுத்துப் பிடித்து அடக்க வேண்டும். (கடோபநிஷத் 3-3.)

கர்மங்கள் அவற்றின் பயன்களைப் பொறுத்து மூவகைப்படும். பல பிறவிகளில் கர்மங்களின் பலனை அனுபவியாமல் சேர்ந்து இருப்பது ஸஞ்சித கர்மம். இந்தப் பிறப்பில் அனுபவிக்கத் தரப்படும் இன்ப துன்பங்கள் பிராரப்த கர்மம். ஆகாமிய கர்மம் என்பது, எஞ்சிய கர்மத்திற்கும் இந்தப் பிறப்பில் அனுபவிக்கத் தந்தது போக மறுபிறப்பில் அனுபவிக்கத் தரப்படும் கர்மபலன்.

ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டுவிட்டால் நமக்கு உய்வதற்கு ஊக்கமும் முயற்சியும் எவ்வாறு ஏற்படும்? பழைய கர்மபலன்களுக்கு ஏற்ப ஒருவன் வசதியுள்ள அல்லது வசதியற்ற குடும்பத்தில் பிறக்கிறுன். கெட்ட கர்மாவினுல் விலங்குகளாகவும் பிறக்கலாம். பிறந்த பிறகு அந்த ஜீவன் தன் முயற்சியால்தான் முன்னேற வேண்டும். நான் எனது என்ற எண்ணங்களை விட்டு, விருப்பு வெறுப்பு அற்று, இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதி ஞானம் பெற்ருல் சஞ்சித ஆகாமிய கர்மங்கள் ஞானத்தால் சாம்பலாகி விடும். பிராரப்த கர்மங்களின் தீவிரம் குறைக்கப்படும். சஞ்சித ஆகாமிய கர்மங்கள் அழியப்படுவதால் முக்தி கிட்டும்.

ஒருவன் கொலை செய்துவிட்டு வக்கீலின் சாமர்த்தியத்தினுல் தப்பித்தாலும் தெய்வம் அவனை விடாமல் தண்டிக்கும். தெய்வம் நின்று கொல்லும் என்பது மூதுரை. இந்தப் பிறவியிலே அவனுக்குத் தண்டனை கிடைக்கும். மறுபிறவியிலும் விலங்காகப் பிறப்பான். தப்பிவைத்த வக்கீலும் தண்டனை பெறுவான்.

"கர்மத்தினுல் சொற்ப பலனே உண்டு. கர்மத்தினுல் தளையே ஏற்படுகிறது" என்று ஆதிசங்கரர் கூறினதாகச் சொல்லப்படுகிறது. அவர் கூறியது காம்ய கர்மத்தைத்தான்; நித்திய நைமித்திக கர்மத்தை அல்ல. மதப்பிரசாரமே சிறந்த கர்மாதான். அதை ஈசுவரப்பிரீதியாக அவர் செய்தார். பலனையும் பற்றையும் விட்டால் ஞானம் உண்டாகிறது.

கீதையில் விபூதியோகத்தில், "எந்தத் துறையில் சிறந்தது எதுவோ அதுவே நான்" என்கிறுர் பகவான். ஆதித்தயர்களில் நான் விஷ்ணு; பிரகாசிக்கும் பொருள்களில் நான் சூரியன்; ருத்திரர்களில் சங்கரன்; முனிவர்களில் வியாசர். ஒருவன் சிறந்த ஆற்றலைக் காட்டினுல் அதுவே எனது சக்தி."

"சிறந்த மேதையே மூளையின் பத்தில் ஒரு பங்கு ஆற்றலைத்தான் பயன்படுத்துகிறுன்"

என்கிறார் டாக்டர் வில்லியம் ஜேம்ஸ். தியானத்தால் இந்த மூளைச் சக்தி அதிகப் படுகிறது.

ஒருவன் எந்தத் துறையில் இருந்தாலும், உழைப்பும் விடாமுயற்சியும் ஊக்கமும் ஆழ்ந்த சிந்தனையும் கொண்டு அந்தத் துறையில் சிறந்து விளங்கி ஜன சமூகத்திற்குப் பணியாற்றினால், அவன் தெய்வத்தன்மையை நோக்கி முன்னேறு கிறான்.

தைத்திரீயத்தில், ''ஜனசமூகத்தில் நான் கீர்த்தி பெறவேண்டும். எல்லாத் துறை களிலும் நான் சிறந்து விளங்க வேண்டும்'' என்று ரிஷி பிரார்த்திக்கிறார். இது சமூகப் பணிக்கே.

கருமத்தின் சாமர்த்தியத்தை நிவேதன மாகப் பகவானுக்கு அளிக்க வேண்டும். வேலை நிறுத்தமோ குறைந்த வேலை செய்து அதிகம் ஊதியம் பெறுவதோ தருமத்திற்கு விரோதம். ''ஒவ்வோர் ஆத்மாவும் தெய்விகமானது. தெய்வசக்தியை வெளிப் படுத்தி பூரணத்தன்மையை நோக்கி முன்னேறுவது மனிதனின் நோக்கமாக இருக்க வேண்டும்'' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஜபம், தியானம் போன்று அவனவன் வேலையைச் சிறப்பாகச் செய்வதும் ஈசுவர வழிபாடுதான்.

''செய்யவேண்டிய கர்மத்தை சுயநலப் பற்று இல்லாமல் (பொது நன்மைக்காக), செவ்வனே செய்து என்னை அடைகிறான்'' என்கிறார் பகவான் (கீதை 3-9). மனிதன் தன் கர்மாவைச் சிறக்கச் செய்து ஞானம் பெற்று சித்தியடைகிறான் (கீதை 8-45). எவர் எவ்வுயிர்க்கும் நன்மை செய்கின்றனரோ அவர் என்னை அடைகின்றனர் (5-25). பிறரின் துன்பத்தை எவன் தனதாகப் பாவிக் கின்றானோ அவனே யோகி (11-32). எவன் என்னை ஒவ்வோர் உயிரினிடத்தும் காண்கிறானோ, என்னிடத்திலும் அந்த உயிர்களைக் காண்கிறானோ அவன் என்னை அடைகிறான் (13-28).

ஈசாவாஸ்ய உபநிஷதம் ''நூறு ஆண்டுக் காலம் விதித்த கர்மாவைச் செய்து வாழ விரும்பு'' என்று கூறுகிறது.

ஞானத்துடன் கர்மமும் வேண்டும். (பிரம்மசூத்திரம் 3-4-7). ''உலக நன்மைக்கும் மற்றவர்களுக்கு உதாரணமாகவும் நானே கர்மம் செய்கிறேன் (கீதை 3-22). ஜனகர் முதலானோர் கர்ம யோகத்தாலேயே சித்தி அடைந்தனர் (3-20). ஞானியும் உலகம் நல்வழிப்படுவதை விரும்பிப் பற்றில்லாது கர்மம் செய்யவேண்டும் (3-25).

கீதை 18-ஆம் அத்தியாயத்தில் கர்மயோகி யின் ஞானம், பகுத்தறிவு, மனஉறுதி, ஆனந்தம் ஆகியவை பற்றிப் பகவான் கூறுகிறார்.

நல்லது கெட்டது என்ற கர்மத்தைப் பகுத்தறிவால் அறிந்து சமூகத்திற்கு நன்மை பயப்பதாகக் கர்மம் அமையவேண்டும். பற்றற்று அதனைச் செய்ய வேண்டும். புத்தர் துன்பப்படும் மனிதர்களுக்கு நன்மை செய்வதே தன் மதம் என்றார். ''நல்லவனாய் இரு, நல்லதைச் செய்'' என்றார்.

வேலையில் நேர்மை உள்ளவன் ஈசனுக்கு வழிபாடு செய்கிறான்.

ஆசிரியன் சீடனுக்கு வஞ்சிக்காமல் கல்வி போதிப்பது கடமை. வியாபாரி பொருள் களில் கலப்படமும், கள்ள மார்க்கெட்டில் விற்பனையும் செய்யலாகாது. அரசு அலுவலகத்தில் உள்ளவர் பொது மக்களுக்குக் காசு வாங்காமல் சேவை செய்யவேண்டும். முதலாளிகள் தொழிலாளி நலனைப் பேணவேண்டும்.

வறுமை, நோய், வேலையில்லாமை, பேராசை, வஞ்சகம், தன்னல அரசியல் இவற்றை எதிர்த்துப் போராடுவதே ஒரு வேள்வி ஆகும்.

"சுயநலத்துடன் உன் முத்திக்குப் பாடுபட்டால் நீ சித்தியடையமாட்டாய். மறறவர் விடுதலைக்குப் பாடுபடு" என்ருர் சுவாமி விவேகானந்தர்.

அரவிந்தரும், "மற்றவர் முன்னேற்றத் திற்குப் பாடுபடு" என்கிருர். "மனிதனின் கடமை மற்ற மனிதர்களுக்கு உதவுதலே" என்கிருர் விஞ்ஞான மேதை ஈன்ஸ்டீன்.

கர்மயோகத்தில் பலனைத் தியாகம் செய்வதால் ஞானம் ஏற்படுகிறது.

"எளிய ஜனங்களுக்கு உதவு" என்கிருர் ஆதிசங்கரர் பஜகோவிந்தத்தில் (தேயம் தீனஜநாய ச வித்தம்). அவ்விதம் செய் வதே ஈசுவர வழிபாடு ஆகும்.

"இரத்தல் கூடாது; முக்திக்காகப் பகவானிடம் இரத்தல் கூடச் சுயநலமானது" என்கிருர் சுவாமி விவேகானந்தர்.

கேவலம் "நானே பிரம்மம்" என்ற வாக்கியஞானத்தால் முக்தி கிடைத்து விடாது. காகிதத்தில் வரைந்த கத்திரிக்காய் கறிக்கு உதவாது. அனுபவ ஞானம் வேண்டும்.

கர்மயோகமே பக்தியும் ஞானமும் பெற உபாயம். ராமகிருஷ்ண சங்கத்துத்துறவிகள் பஞ்சம், வெள்ளம், பூகம்பம் முதலிய காலங்களில் சேவை செய்வதும் மதப் பிரசாரம், கல்வி, மருத்துவம், நூல் நிலையங்கள் அமைத்தல் போன்ற துறைகளில் தொண்டு புரிவதும் சிறந்த ஈசுவரத் தொண்டாகப் போற்றக்கூடியது. ஆகவே கர்மயோகமே சிறந்தது எனலாம்.

# புனித வாழ்க்கை

சுவாமி விஞ்ஞானனந்தர்

ஒருவர் மகாத்மா என்பதற்கு அடையாளம் எதுவென்ருல், அவர்கள் என்னவெல்லாம் சொல்லுகிருர்களோ அவை அப்படியே நடப்பதுதான். அவர்கள் வாயிலிருந்து எது வருகிறதோ அது நிச்சயமாக நடந்தே தீரும். ஒரு சாதுவின் அடையாளம் எதுவென்ருல், அவரை அங்குலம் அங்குலமாக மேலும் கீழும் அடி அடியென்று அடித்து நொறுக் கினலும், அந்த வேதனையை அமைதியாக அவர் பொறுத்துக்கொள்வதுதான். அதுதான் உண்மையான சாதுவின் – சந்நியாசியின் அடையாளம்.

சாது அல்லது சந்நியாசி ஆவது என்பது உண்மையிலேயே மிக மிகக் கடினமான காரியம்; அவர் தமது உடம்பு, மனம், பேச்சு ஆகிய அனைத்தையுமே முழுக்க முழுக்க அடக்கியாள வேண்டும்; எப்போதும் அமைதி மயமாகவும், திருப்திமயமாகவும் அடக்கமான நடத்தை உடையவராகவும், தன்னந்தனிமையில் இன்பம் காண்பவராக வும் வாழ வேண்டும். இப்படி யார் வாழ் கிருரோ அவர்தான் உண்மையான சாது.

உண்மையான சாது யாரென்ருல், யார் காலம் இடம் காரணம் பற்றிய ஞானத்தை அடைந்து இவற்றையெல்லாம் கடந்து அப் பால் சென்றுவிடுகிருர்களோ அவர்கள் தாம். இத்தகைய ஞானத்தை அடைவது மிகவும் கடினம். ஏனென்ருல் ஞானம் பெறுவது என்பது அதனை நேரிடையாக அனுபவிப்ப தாகும்.

யார் சம்ஸ்காரமாகிய பெரிய மூட்டை முழுவதையும் அழித்து விடுகிறார்களோ, யார் தம்மை முழுக்க முழுக்கப் பகவானிடம் அர்ப்பணித்துக் கொள்ளுகிறார்களோ, அவர்கள்தாம் உண்மையான சந்நியாசிகள். எல்லா விருப்பங்களும் ஆசைகளும் கடவுளோடு இணைந்துவிடவேண்டும். அவர்களுடைய குறிக்கோள், 'எனக்குக் கடவுள் மட்டுமே வேண்டும். வேறு எதுவும் வேண்டாம்' என்பதாக இருக்க வேண்டும்.

நீங்கள் முழுக்க முழுக்க எல்லாவற்றிலிருந்தும் பற்றுக்களை அறுத்துக்கொண்டால் தவிர நீங்கள் செய்யும் தியானமோ, பிரார்த்தனையோ, சேவையோ, சாஸ்திரப் படிப்போ எதுவுமே பலன் தராது. ஸ்ரீராமகிருஷ்ணர் 'சந்நியாசி, பெண் ஒருத்தியின் படத்தைக் கூடப் பார்க்கக் கூடாது' என்று கூறுவார். அதனால் நீங்கள் பெண்களை வெறுக்க வேண்டும் என்பதோ, அவர்களை மோசமாக நடத்த வேண்டும் என்பதோ இல்லை. அதற்குப் பதிலாக நீங்கள் அவர்களை மிகுந்த மரியாதையோடும் புனிதத்தோடும் போற்ற வேண்டும். அவர்களை கோவிலின் உள்ளே இருக்கும் நம் அன்னை பராசக்தியாக நினைக்க வேண்டும். இந்தப் பெண்கள்தாம் உலகம் காக்கும் தாய்மார்களாகவும் மாறுகிறார்கள். எனவே சற்றுத் தொலைவில் நின்றே அவர்களை வணங்க வேண்டும்.

நீங்கள் எல்லாம் சந்நியாசிகள். அதனால் தான் இத்தகைய மிக உயர்ந்த வாழ்வை வாழ வேண்டியிருக்கிறது. பெண்களோடு அதிகமாக பழகாதீர்கள். நீங்கள் நம் சங்கத்தின் விதிப்படி பொதுச் சேவை நிறையச் செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் பெண்களோடு பழகுவது தவிர்க்க முடியாததாகிறது. ஆனால் இங்கே நீங்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது–இவைகள் எல்லாம் பகவான் வேலைகள். அவருடைய கருவியாகவே நாம் இந்த வேலைகளைச் செய்கிறோம். நமக்கென்று தனிப்பட்ட நினைப்போ அக்கறையோ இதில் இல்லை என்பதாகும். அப்பொழுது யாரிடம் பழகினாலும் மனதில் குருதேவர் நினைப்பு மட்டுமே இருக்கும். பற்று வராது. இந்த அறிவுரையை குருதேவர் அடிக்கடி கூறுவார்.



பெண்களோடு பழகவும் வேண்டும், அதே நேரத்தில் மனதில் எந்தவிதப் பற்றும் ஏற்படக்கூடாது என்னும் இந்த இரண்டையும் நாம் இணைத்துக்கொள்ள வேண்டும். பொதுச் சேவையின் பொருட்டுப் பெண்களோடு நாம் பழக வேண்டும். ஆனால் அந்தப் பழக்கம் மிகமிகக் குறைந்த காலமாக இருக்கும்படியும் பார்த்துக்கொள்ள வேண்டும். எப்போதும் எச்சரிக்கையாகவும் நமக்கு உள்ள எல்லையைச் சிறிதும் மீறாமலும் இருக்க வேண்டும். நான் இப்படிச் சொல்வதனால் நீங்கள் எல்லோரும் உங்கள் மடங்களிலேயே உங்கள் அறைகளில் உட்கார்ந்து கதவுகளைத் தாழ்ப்பாள் போட்டுக்கொள்ள வேண்டும் என்பது என் கருத்தல்ல. நீங்கள் செய்யும் வேலைகள் அத்தனையுமே உங்கள் மனதைத் தூய்மைப்படுத்தும் சாதனைகளாக அமைய வேண்டும். பொதுச்சேவை செய்யும் நேரத்தில்கூட உங்கள் வாழ்வின் இலட்சியமான துறவும், கடவுளை உணர்வதும் உங்கள் கண்முன் நிற்க வேண்டும்.

சிறிது நேரத் தியானம் ஜபத்திற்குப் பிறகு தேவையில்லாத பேச்சில், நம் வட இந்திய சாதுக்கள் பலர் ஈடுபட்டுப் பொழுதைக் கழிப்பது போல், நீங்கள் பொழுதைக் கழிக்காமல், இப்படிப் பொதுச் சேவைகளில் உங்களை ஈடுபடுத்திக்கொள்வதுஎவ்வளவோ நல்லது என்பது மிகவும் உண்மை. இது குறித்து சுவாமி விவேகானந்தரோடு

நான் ஒருமுறை நெடுநேரம் வாதித்திருக்கிறேன்.

வாழ்வின் இலட்சியம் ஆன்மாவை உணர்வதே. உயிர் வாழ்வதற்கு என்ன தேவையோ அவற்றைப் பெறுவதோடு மட்டும் உலகப் பொருளைப் பற்றித் திருப்தி அடைந்துவிடுங்கள். மற்ற நேரம் முழுவதும் எந்தவிதமான பாராட்டுக்கும் புகழுக்கும் சிறிதும் ஆசைப் படாமல் கடவுளின் காரியங்களைச் செய்யுங்கள்.

நான் எப்போதும் என் இதயத்தின் பேராழத்திலிருந்து 'என்னையும் சேர்த்து உலக உயிர் அத்தனையையும் பகவானே! ஆசீர்வதியுங்கள்' என்று பிரார்த்தனை செய்கிறேன். இத்தகைய பிரார்த்தனை மிகவும் முக்கியமானதாகும். பகவான பெயரை எப்போதும் ஜபம் செய்யுங்கள். என் சகோதரர்களே! எந்த அளவு நீங்கள் பகவான் பெயரை ஜபிக்கின்றீர்களோ, அந்த அளவு உங்களுக்கு உலகபயம் இல்லை.

நீங்கள் நம் குருதேவரின் முன் இருக்கும் வரையில், அதாவது அவர் நினைவு உங்கள் மனதில் இருக்கும் வரையில், உங்களுக்கு எந்தவிதமான பயமும் இல்லை. உங்கள் இதயம் முழுவதும் கரைந்து உருகும் வகையில் அவருடைய பெயரைப் பாடுங்கள்! இரவும் பகலும் ஒவ்வொரு விநாடியும் பாடுங்கள்! மூச்சு விடமுடியாமல் வேலைகளைச் செய்யும்போதும், வெறுமனே இருக்கும்போதும் எப்போதும் பாடுங்கள்! வெளியில் காரியங்களைச் செய்துகொண்டிருக்கும்போதும் அவருடைய பெயரை மனதிற்குள்ளே ஜபம் செய்யுங்கள். 'அப்படிச் செய்வதனால் பலன் கிடைக்குமா?' என்பது போன்ற சந்தேகம் உங்கள் மனதில் எழவே கூடாது. ஏனென்றால் நம் குருதேவரின் பெயரைச் சொல்பவர்களுக்குத் துன்பம் வருவதற்குக் காரணமே இல்லை

---

### மேலும் கீழும்!

முல்லா நஸீருத்தினின் நிலத்தில் தனக்கும் ஒரு பங்கு வேண்டுமென்று சுல்தானிடமிருந்து உரிமை பெற்றுக்கொண்டு வந்தான் ஒருவன்.

"உனக்கு அறுவடையில் என்ன பாகம் வேண்டும்?" என்று அவனிடம் கேட்டபோது "நிலத்துக்கு மேலே விளைவது எனக்கு என்று குறிப்பிடுங்கள்" என்றான் அந்தப் புத்திசாலி. அவ்வாறே அரசாங்கம் ஆணையிட்டது.

முல்லா அந்த முறை வள்ளிக்கிழங்கு பயிரிட்டார். பயிர் விளைந்தவுடன் முல்லா நிலத்தின் கீழே இருந்த கிழங்குகளைத் தோண்டி எடுத்துக்கொண்டு, நிலத்துக்கு மேலே இருந்த வெற்றுச்செடியை வெட்டி அவனுக்குக் கொடுத்துவிட்டார்.

ஏமாந்த அவன், அந்தத் தடவை நிலத்துக்குக் கீழே விளைவது தனக்குச் சொந்தம் என்று அரசாங்க ஆணையை மாற்றிக்கொண்டு வந்தான்.

இந்தத் தடவை முல்லா பயிரிட்டது கோதுமை!



—சக்தி

# அருள்நெறிக் கதை

## ஸ்ரீகிருஷ்ணன் தூது

**ஆர். ரங்கநாதன்**

பாண்டவர்களுக்குச் சேர வேண்டிய பாதி ராஜ்யத்தைக் கௌரவரிடமிருந்து கேட்டுப் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் ஸ்ரீ கிருஷ்ணர் கௌரவர்களிடம் தூது செலலப் புறப்பட்டார்.

அப்போது தருமர் கிருஷ்ணரிடம், "எங்களுக்காகத் தூது செல்லும் தங்களுக்கு அங்கு வீணுக அவமானம்தான் உண்டாகும். ஆகையால் நீர் அங்கே சென்று அவமானப் படவேண்டாம்" என்று கேட்டுக்கொண்டார்.

அதற்குக் கண்ணபிரான் "உங்களுடைய நன்மைதான் எனக்குப் பெரிது. எனக்கு ஏற்படும் மான அவமானம் ஒரு பொருட்டல்ல" என்று கூறி, அஸ்தினபுரம் புறப்பட்டுச் சென்ருர்.

அந்த நகருக்குச் சென்றபோது, துரியோதனன் கண்ணனை எதிர்கொண்டு அழைக்காமல், சகுனியின் பேச்சைக் கேட்டு, கிருஷ்ணனே தன்னை வந்து பார்க்கட்டும் என்று ஆணவத்துடன் இருந்துவிட்டான்.

இதனை உணர்ந்த கண்ணபிரான், அஸ்தினபுரத்தில் செல்வத்துடன் விளங்கிய பலரின் மாளிகை இருக்கும்போது, அங்கெல்லாம் செல்லாமல், பண்பும் பணிவும் கொண்ட விதுரரின் வீட்டிற்கு விருந்தினராக எழுந்தருளினர்.

பாற்கடலில் பள்ளிகொண்ட பெருமானும், பிரளயகாலத்தில் ஆலிலையில் பள்ளிகொள்பவனும், நான்கு வேதங்களில் வாழ்பவனுமான கிருஷ்ண பரமாத்மா தன் மனைக்கு எழுந்தருளவே, விதுரன் மிகவும் மகிழ்ந்து, 'நாம் என்ன தவம் செய்தோம்!' என்று மன முருகி, பகவானை வரவேற்று உபசரித்து விருந்தளித்தான்.

பின்பு விதுரன் கண்ணனைத் துதித்து வணங்கி, அவரை நோக்கி, "நீர் விரும்பிப் பள்ளி கொள்ளும் சேஷசயனத்தை விட்டு நீங்கி இங்கே தனியே வந்ததற்குக் காரணம் யாது?" என்று பணிவுடன் வினவினன்.

அதற்கு வாசுதேவர், "பாண்டவர் வனவாசத்தை முடித்துக்கொண்டு இப்போது நாட்டிற்கு வந்துள்ளனர். அவர்களுக்குரிய நாட்டைத் தரும்படி துரியோதனனிடம் கேட்க வந்துள்ளோம்" என்ருர்.

அதற்கு விதுரன், "தான் செய்வது அநீதி என்பதை உணராத துரியோதனனிடம் நீதியை எடுத்துக்கூறி யாது பயன்? நல்ல வார்த்தைக்கும், தீய வார்த்தைக்கும் பேதம் தெரியாத மூர்க்கர் நிறைந்த சபையிலா நீதியை எடுத்துரைக்க முடியும்? சகுனி போன்ற மாபாவிகளின் சொல்லையே நீதியாகவும், பீஷ்மர் துரோணர் முதலான சாத்துவிகர் சொல்லும் நீதிகளை அநீதிகளாக

வும் கொள்ளும் கயவர்கள் நிறைந்த சபையா யிற்றே இது ! இங்கு நீதி எடுபடுமா ? அவர் களுக்கு நீர் நல்ல வார்த்தை கூறினல் அது உமக்கும் உம் அடியார்களுக்கும் மிகவும் வருத்தம் விளைவிப்பதாகும்'' என்று விதுரன் கூறினன்.

அதற்குக் கிருஷ்ணர் சமாதான வார்த்தை களைச் சொல்லிவிட்டு மறுநாள் காலை எழுந்து நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, ஸந்த்யை, ஜபம், அக்கினி ஹோத்ரம் இவற்றை முடித்து பின், துரியோ தனனின் சபைக்குச் சென்ருர்.

அங்கே ஐம்பத்தாறு தேசத்து அரசர் களும், திருதராஷ்டிரன், பீஷ்மர், துரோணர், கர்ணன் முதலானேரும், துஷ்டர்களாகிய சகுனி, துச்சாதனன், துரியோதனன் முதலிய வர்களும் முனிவர்களும் கூடியிருந்தனர். விதுரரும் அங்கு வந்து சேர்ந்தார்.

ஸ்ரீ கிருஷ்ணர் சபைக்கு வருவதற்கு முன்பு துரியோதனன், அந்தச் சபையினரைப் பார்த்து, ''கண்ணன் இந்தச் சபைக்கு வரும் போது யாரும் எழுந்து நின்று மரியாதை செய்யக்கூடாது. அவ்வாறு யாராயினும் செய்தால், அவர்களின் ஊரைத் தீக்கிரை யாக்கி அவர்களையும் கொல்லுவேன்!'' என்று கூறிக் கடுமையான கட்டளையைப் பிறப் பித்தான்.

கண்ணபிரான் சபைக்கு வந்ததும் துரியோ தனன் உட்பட அனைவரும், கிருஷ்ண னுடைய தேஜஸ்ஸில் மயங்கித் தம்மை அறி யாமலேயே எழுந்து நின்று நமஸ்கரித்தார் கள். பின்பு ஓர் ஆசனத்தைக் கொண்டு வந்து போட்டு அதில் அமரும்படி கேட்டுக் கொண்டனர். கிருஷ்ணனும் அங்ஙனமே ஆசனத்தில் அமர்ந்தார்.

துரியோதனன் கிருஷ்ணனிடம் முகத்தை வேறுபுறமாகத் திருப்பிக்கொண்டு, ''நேற்றே நீர் இந்த நகரத்திற்கு வந்தும், என் அரண் மனைக்கு வராமல் விதுரன் மனைக்குச் சென்ற காரணம் யாது ?'' என்று வினவினன்.

அதற்குத் திருமால் அவனை நோக்கி, ''என் வீடு, உன் வீடு என்ற பேதம் பாராட்டாத தனல் அங்கே போனேன். மேலும், விதுரன் எதிரே வந்து வரவேற்று விருந்து சொன்னன். அதனல் நேற்றிரவு அவன் வீட்டில் தங்கி னேன். உன் இல்லத்திற்கு வராததற்குப் பின்னும் ஒரு காரணம் உண்டு. உனக்கு விரோதிகளாகிய பாண்டவர் அனுப்பி வந்த தூதுவன் யான். அதனல் உனக்குப் பிடிக்காத சில வார்த்தைகளைப் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். அவ்வாறு பேச வந்த நான் உன் வீட்டில் விருந்துண்ண லாகாது. விருந்துண்டால் உனக்கு விரோதம் பேசலாகாது'' என்று கூறினர்.

இதைக் கேட்ட துரியோதனன் ஏளனத் துடன் நகைத்து, ''கிருஷ்ணு! நீர் தூது வந்ததன் காரணம் யாது?'' என்று வினவினன்.

''சூதாட்டத்தில் பாண்டவர்கள் அரசிழந்து நீங்கள் சொன்ன சொல் தவருது அயலாரைப் போல் நொந்து கானகத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் செய்து ஓர் ஆண்டு அஞ்ஞாதவாசமும் முடித்துத் திரும்பி வந்திருக்கிருர்கள். முன்பு பேசியபடி நீ அவர்களுக்கு உரிய பாதி ராஜ்யத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்க வந்துள்ளேன்'' என்ருர் கண்ணபிரான்.

அதற்குத் துரியோதனன், ''அன்று சூதாடித் தங்கள் உரிமை முழுவதையும் இழந்து சென்ற பஞ்சையர்களாகிய பாண்ட வர்களுக்கு நீ உன் சாமர்த்தியத்தினல் என்னிடமிருந்து நாட்டை வாங்கிக் கொடுத்துவிடலாமென்று நினைக்கிருய். அது ஒருபோதும் முடியாது. அவர்கள் திரும்பக் கானகம் சென்று திரிவதே தகும்'' என்று உரைத்தான்.

ஸ்ரீ கிருஷ்ணன் அந்தக் கொடியவனை நோக்கி, ''மன்னவ! உனக்கு அவர்கள் ராஜ்யத்தைத்தர மனமில்லாவிட்டால் அவர்களுக்கு ஐந்து ஊர்களையாவது கொடு'

என்றார். அதற்கும் துரியோதனன் மறுக்கவே "பின் அவர்கள் வசிப்பதற்கு ஐந்து வீடுகளை யாவது கொடு " என்றார்.

துரியோதனன் மிகவும் கோபத்துடன், "ஊசி முனை அளவு இடம்கூடக் கொடுக்க முடியாது" என்றான்.

இது கேட்ட கண்ணன், "துரியோதனா! இந்தச் சபையில் அமர்ந்திருக்கும் உன் பாட்டனார் பீஷ்மரைப் பார். அவர் தம் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற இளையதாய் பெற்ற பிள்ளைகளுக்கு இந்த அரசையும் வாழ்வையும் கொடுத்துவிட்டுக் கல்யாணமே செய்துகொள்ளாமல் உன் எதிரில் இருக்கிறார். அவர் குலத்தில் பிறந்த நீயோ ஐந்து ஊர்களைக்கூடக் கொடுக்க மனமில்லாமல் பேசுகிறாய். உன் குலத்தின் பெருமையையும் ஒற்றுமையையும் காப்பாற்றத் தவறிவிட்டாய்" என்று கூறி, பின் திருதராஷ்டிரனைப் பார்த்து, "திருதராஷ்டிரரே! உங்கள் குலம் உலகில் எல்லோராலும் புகழப்பெற்றது; தர்மம், தயை முதலிய குணங்கள் பொருந்தியது. அத்தகைய குலத்தில் உதித்த பாண்டவர் களுக்கும் கௌரவர்களுக்கும் மற்றும் உலகில் உள்ள வீரர்களுக்கும் நாசம் விளையக்கூடாது என்ற எண்ணத்தில் சமாதானம் பேச வந்திருக்கிறேன். துரியோதனன் முதலிய உமது புத்திரர்கள் தர்மத்தைவிட்டு அதர்மத்தை மேற்கொண்டு வஞ்சகமாக நடக்கின்றனர். இதனால் நாசம்தான் விளையும். நீர் விரும்பினால் நாசத்தைத் தவிர்க்கலாம். உமது பிள்ளை களுக்குப் புத்தி சொல்லிப் பாண்டவர்களின் நாட்டை அவர்களுக்கு வாங்கிக் கொடும். நீர் அப்படிச் செய்தால் பாண்டவர் அதனைப் பெற்று என்றும் உமக்குத் துணையாக இருப்பார்கள். இல்லையேல் அவர்கள் யுத்தம் செய்யச் சித்தமாக இருக்கிறார்கள். உமக்கு எது சம்மதமோ அதன்படிச் செய்யும்" என்றார்.

இதைக் கேட்ட துரியோதனன் கோபத் துடன் கிருஷ்ணனைப் பார்த்து, "கிருஷ்ணா! அவர்களுக்குப் பங்கு ஏது? யார் கொடுத்தார்கள்? நான் சிறுவனாக இருந்த போது கண்ணில்லாத என் தந்தை அவர்களுக்குக் கொடுத்த விஷயத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. பாண்டவர்களின் வீரத்தைக் கூறி என்னை பயமுறுத்து கிறாயோ? போரில் நான் இந்திரனைக் கண்டும் பயப்படமாட்டேன். பீஷ்மர், துரோணர்,



கிருபர், கர்ணன் இவர்களைத் தேவர்களாலும் வெல்ல முடியாது. பாண்டவர்கள் எனக்கு ஒரு பொருட்டா? போரில் நாங்கள் மரணம் அடைந்தாலும் அடைவோமே தவிர, நான் உயிரோடு இருக்கும் வரையில் ஊசிமுனை அளவு இடங்கூட பாண்டவர்களுக்குக் கிடைக்கும் என்று எண்ணாதே!" என்றான்.

துரியோதனனின் வார்த்தைகளைக் கேட்டுச் சிரித்து ஸ்ரீ கிருஷ்ணன் கூறுகிறார் —"நீ சொன்னதில் ஒன்று சத்தியம்தான். போரில் நீ வீரமரணம் அடையத்தான் போகிறாய். உன் மந்திரிகள், சகோதரர்கள் முதலானவர் களுடன் மரணத்துக்குச் சித்தமாக இரு. துரியோதனா! இன்னும்கேள்: பீமசேனனைப் பாம்புகளாலும் விஷத்தாலும் கொல்ல முயற்சி செய்தது, பாண்டவர்களைக் குந்தி தேவியோடு அரக்கு மாளிகையில் கொளுத்த முயன்றது, ஆடத் தெரியாத யுதிஷ்டிரரோடு சூதாடினது, திரௌபதியை சபைக்கு அழைத்து அவளை அவமானப்படுத்த முயன்றது — இவையெல்லாம் உன் விநாச காலத்திற்குக் காரணமானவை."

இவ்வாறு சகலலோக நாயகரான கிருஷ்ண பகவான் கூறியதும், சபையில் இருந்த

பீஷ்மர், திருதராஷ்டிரன் முதலானோர் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தனர்.

மந்திரிகளில் சிறந்தவரான விதுரர் மட்டும் எழுந்து தர்மார்த்தமான வார்த்தைகளால் திருதராஷ்டிரனைப் பார்த்து, "மகாராஜனே! தர்மருக்குச் சேரவேண்டிய பங்கைக் கொடுக்க ஏற்பாடு செய். அர்ஜுனன் பீமசேனன் முதலானவர்களுடன் கூடியிருக்கிற தர்மபுத்திரரைப் பகவானான கிருஷ்ணர் தம்மவர்களாகக் கிரகித்திருக்கிறார். துரியோதனனை பிள்ளை என்கிற அபிமானத்தால் போஷிக்கிறாய். ஆனால் ஒன்று தெரிந்து கொள். ஸ்ரீ கிருஷ்ணனுக்கு விரோதியான பாவமானது சரீரம் தாங்கித் துரியோதனன் என்ற ரூபத்தில் உன் வீட்டில் வாசம் செய்கிறது. ஆகையினால் அந்தப் புத்திரனை குலத்தின் க்ஷேமம் பொருட்டு விட்டுவிடு. அப்போதுதான் உன் குலம் பிழைத்து அறம் தழைக்கும்" என்று கூறினார்.

இவ்வாறு மகாத்மாவான விதுரர் சொன்ன வார்த்தையைக் கேட்ட துரியோதனன், விதுரரைப் பார்த்துச் சொல்லுகிறான் : "தாசியின் புதல்வனானவனும் கபடனுமாக உள்ள இவனை இந்தச் சபையில் யார் அழைத்தார்கள்? அன்னமிட்ட வீட்டிற்கு இரண்டகம் செய்கிற இவனை ஊருக்கு வெளியே சகலத்தையும் பறித்துக் கொண்டு துரத்துங்கள்" என்று உத்தரவிட்டான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பகவான் கிருஷ்ணரின் கண்களிலிருந்து நீர் பெருகிற்று.

துரியோதனனது வார்த்தைகளைக் கேட்ட விதுரர் கொஞ்சங்கூட அஞ்சாமல் அவனை நோக்கி, "கொடியவனே! என்னைப் பழித்துக் கூறிய உன்னை இப்போதே எமனுலகம் அனுப்பி விடுவேன். ஆனால் குரு குலத்தில் தோன்றிய ஒருவன் தன் பிள்ளையையே கொன்று விட்டான் என்று தேவர்களும் பழித்துரைப்பார்களே என்று அஞ்சுகிறேன். மேலும், நான் பகவானுக்கு உதவியாக இருந்தேன் என்று என்னை நீ பழித்தாய். தர்மத்தையே வளர்க்கின்ற பாண்டவர் பக்கம் நான் பக்ஷமாய் இருக்கிறேன் என்று என்னை வெறுத்தாய். இதற்காக உலகில் என்னை எவரும் பழிப்பாருண்டோ? ஆயினும் உன் சோற்றை உண்டு வளர்ந்த நான் அவ்வாறு செய்வது என் மனச்சாட்சிக்கு விரோதமாகும். ஆகவே அதையும் செய்யேன்; என் கையில் வில் இருந்தால் எந்தச் சமயத்திலாவது யாருக்காவது உதவி செய்ய வேண்டி வரும். ஆகவே இதனைப் போக்கிவிடுகிறேன்" என்று கூறி, தமது வில்லை இரண்டாக முறித்துவிட்டுத் தமது மாளிகை நோக்கிச் சென்றார்.

இந்தச் சமயத்தில் பீஷ்மர் தம்மையும் அறியாமல், "விதுரன் வில்லை முறித்து விட்டான்; இனி பாண்டவர்களுக்குத்தான் வெற்றி" என்று கூறினார்.

இவ்வாறு விதுரன் வில்லை ஒடிக்கும்படிச் செய்தது கிருஷ்ணனுடைய தந்திரமேயாகும். ஏனெனில், விதுரன் செஞ்சோற்றுத் தர்மத்தால் துரியோதனன் பக்கம் சண்டை செய்தால் அவரை வெல்ல ஒருவராலும் முடியாது. அர்ஜுனனது காண்டீபத்தைவிட அதிக சக்தி வாய்ந்தது விதுரனின் வில்.

நடந்தவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த துரியோதனன் மிகுந்த கோபத்துடன் சபையிலிருந்த எல்லோரையும் அவமதித்து விட்டுச் சபையை விட்டு வெளியேறினான். அவனுடைய பிரதானிகளும் அவனுடனே வெளியேறிவிட்டனர்.

பின்பு திருதராஷ்டிரன் தன் மனைவி காந்தாரியை அழைத்து, "துரியோதனன் ஸ்ரீ கிருஷ்ணனின் வார்த்தையைக் கேளாமல் இந்தச் சபையை அவமதித்து வெளியேறி விட்டான். நீ அவனை அழைத்துப் புத்திமதி சொல்' என்றான்.

காந்தாரி புத்திமதி சொல்லியும் கேளாமல் துரியோதனன் தன் தோழர்களுடன்

ஸ்ரீகிருஷ்ணனை சிறையில் அடைக்க சூழ்ச்சி செய்தான. எப்படியெனில், சபா மண்டபத்தில் நிலவறை தோண்டி, அதில் ஆயிரக் கணக்கான வீரர்களை மறைத்து, மேலே கனமில்லாத மெல்லிய சட்டங்களால் மூடி, அதன்மேல் ஆசனத்தைப் போட்டு, அதில் கிருஷ்ணனை வரவழைத்து அமரச்செய்தால், கிருஷ்ணன் பள்ளத்தில் விழுவான்; உடனே வீரர்கள் அவனைச் சிறைபிடித்து விடலாம் என்று சூழ்ச்சி செய்து, மறுநாள் அவ்வாறே செய்து கிருஷ்ணனை சபைக்கு வஞ்சகமாக வரவழைத்தனர். சபையில் அவருக்கு இட்டிருந்த ஆசனத்தைக் காட்டி அமரும் படிக் கூறினர்.

அப்போது பகவான் இவர்களது சூழ்ச்சியைத் தெரிந்துகொண்டு, "துரியோதனா! நான் ஒருவனாக இருக்கிறேன் என்று எண்ணாதே. இதோ பார்!" என்றுகூறி, தம் கண்களில் தீப்பொறி பறக்கக் கோபாவேச நகைப்புடன், திவ்யமான விசுவரூபத்தைக் காட்டினார். தம் கால்களாலே அடியில் இருந்த வீரர்களை உதைத்து உலுக்கினார்.

அவருடைய விசுவரூப தேகத்திலிருந்து நெருப்பு ஜவாலைகள் போல், பிரம்மா, ருத்திரன், லோகபாலர், அகத்தியர், அஷ்ட வசுக்கள், அசுவினிதேவர், கந்தர்வர், அரக்கர், கயக்கர், கின்னரர், பாண்டவர், விருஷ்ணிகள் முதலானவர்களும் பதினான்கு லோகத்திலுமுள்ள ஜனங்களும், சமுத்திரங்களும், நதிகளும், மலைகளும் தோன்றின. இவ்வாறு மாயவனின் விசுவரூபத்தைத் துரோணர், பீஷ்மர், விதுரர், ஸஞ்சயன் முதலிய சில பெரியோர்களையும் முனிவர்களையும் தவிர மற்ற அனைவரும் கண்டு மிக்க பயத்துடன் கண்களை மூடிக்கொண்டனர்.

பின்பு தேவர்களும் முனிவர்களும் பகவானை நமஸ்கரித்து நான்மறைகள் பாடி, கோபத்தை அடக்குமாறு வேண்டினர். "இந்த ரூபத்தைப் பார்த்தால் சகல லோகமும் நாசமடையும். இந்த அரசன் உமக்கு ஒரு லட்சியமா? இவர்களுக்காக உமது திவ்யரூபத்தைக் காட்ட வேண்டுமா? இந்த ரூபத்தை அடக்கிக்கொள்ளும்" என்று வேண்டிக் கொண்டனர்.

இந்த அதிசய ரூபத்தைப் பார்க்கத் திருதராஷ்டிரன் விரும்பினபடியால் அவனுக்குப் பகவான் அப்போது திவ்யப் பார்வையைக் கொடுத்தார். திருதராஷ்டிரன் சிறிது நேரம் பார்த்து, பின் பகவானை ஸ்தோத்திரம் செய்து, "உம்மைப் பார்த்த கண்களால் வேறு எதையும் பார்க்க மாட்டேன். என் பார்வையை மறைத்து விடும்" என்று பிரார்த்தித்தான். பகவானின் விருப்பத்தால் அவன் பார்வை மறைந்தது. பிறகு பகவான் அனைவரின் வேண்டுகோளுக் கிணங்கத் தம் விசுவரூபத்தை மறைத்துக் கொண்டார்.

ரிஷிகள் பகவானிடத்தில் விடைபெற்றுக் கொண்டு மறைந்துவிட்டனர். பிறகு ஸ்ரீகிருஷ்ணர் அங்கிருந்த அனைவரிடத்திலும் விடைபெற்றுக் குந்தியினிடம் சென்று, சபையில் நடந்தவற்றைக் கூறி, அவள் பாண்டவர்களுக்குக் கூறிய விஷயங்களைக் கேட்டுக்கொண்டு, விதுரரின் வீட்டிற்குப் போய், போஜனம் முடித்துக்கொண்டு பாண்டவர்களிடம் வந்து சேர்ந்தார்.

பின்பு பாண்டவர்கள் போர் புரிவதாகத் தீர்மானம் செய்து, குருக்ஷேத்திரத்தில் கூடி யுத்தம் ஆரம்பித்தனர். பல நாட்டு அரசர்களும் தமது சேனைகளுடன் பாண்டவர்களுக்கு உதவி புரிந்தனர். பதினெட்டு நாள் யுத்தம் நடைபெற்றது.

ஸ்ரீ கிருஷ்ணரின் சகாயத்தால் பாண்டவர் இறுதியில் வெற்றி பெற்று, குருபூமி முழுவதும் அவர்கள் வசமாயிற்று. அஸ்தினாபுரத்தில் தருமர் நகரப்பிரவேசம் செய்து பட்டாபிஷேகம் செய்து கொண்டார். நாடு முழுவதும் தர்மம் தழைத்தது.

# பெரியாழ்வார் திருமொழி-இசையமுதம்

அலங்கார தேவராஜன்

ஆழ்வார்களில் தலைவரான நம்மாழ்வாருக்கு முகமாகத் திகழும் சிறப்புடையவர் பெரியாழ்வார். எம்பெருமானுடைய சகல மங்கள குணங்களாகிய அமுத வெள்ளத்தில் மூழ்கிப் பெரிதும் ஈடுபட்டு நன்ருக ஆழ்ந்துவிடும் காரணத்தால் ஆழ்வார்கள் என்று அழைக்கப் பெறுவது மரபு. இந்த மரபிலே அதாவது ஆழ்வார்களிலே பெரியாழ்வார் என்று கூறப் பெறும் பெருமை பெற்றவர் பெரியாழ்வார்.

பெரியாழ்வார் பெரியவனைப் பல கோணங் களில் தாமும் அனுபவித்து மற்றவர்களையும் அனுபவிக்கச் செய்வதில பெரியவர். தமிழ் மறையாகிய நா - ாயிர திவ்யப் பிரபந்தத்திலே பெரியாழ்வாரின் பாசுரங்களை அனுபவிக்கும் பேறு பெற்ருேர் அனைவருமே பெரியாழ்வார் எய்திய பெரும் பதவியை அடைவர் என்பது திண்ணம். ஏன்? எம்பெருமானே இவரது பாசுரங்களைக் கேட்டுப் பெருமையும் பேரா னந்தமும் பெற்ருன். அத்தகைய தெய்வத் தன்மை வாய்ந்தவை அவரது பாசுரங்கள். அவர் அருளிச்செய்த நானூற்று அறுபத் தொரு பாசுரங்களும் பெரியாழ்வார் திரு மொழி என்று கூறப்படுகிறது.

பெரியாழ்வார் திருமொழி பிறக்கக் காரண மாக இருந்தது ஜகன்மோகன வேணுகான னின் அமுதகீத வலையேதான். உலகை வசீகரப்படுத்தும் அந்த மனமோகன கீதம் பெரியாழ்வாரைப் பரவசப்படுத்தி விடுகிறது. குழந்தையின் மழலை இன்பத்தைக் கேட்கும் பேறு பெருதவர்கள்தாம் குழலிசை இனிது; யாழ்இசைஇனிது என்றெல்லாம் கூறுவார்கள் என்கிருர் அல்லவா வள்ளுவர்? ஆனல், கமலக் கண்ணனுகிய தெய்விகக் குழந்தை யின் மழலைச் சொல்லைக் கேட்டபின்பும் குழலிசைதான் இனிது என்று பாடுகிருர் பெரி யாழ்வார். தெய்விக வேய்ங்குழல் திருமாலின் செங்கனிவாய் இதழ்களால் ஊதப்பெறுவது முதலிய காரணங்களால் குழலிசையைச் சிறப்பித்துப் பேசுகிருர் பெரியாழ்வார். யாழை விடவும் குழலிசை இனிது என்பது பற்றித் தான் முதலில் குழலைக் குறிப்பிட்டுள்ளார் திருவள்ளுவர். அது குழந்தைக் கண்ணனின் இசைக் கருவியாதலால அந்தப் பெருமை பெற்றது போலும் அந்த மாயக் குழலின் மனேரம்யமான இசையைக் கேட்டுச் சரா சரங்களே புளகாங்கிதம் அடைகின்றனவாம்.

செல்வக் கண்ணனின் சின்னஞ்சிறு விரல் கள் குழலின் துளைகளைப் புதைத்துப் புதைத்துத் திறக்கின்றன. விழிகள் துளை தோறும் ஓடுவது போல நோக்குகின்றன; அந்த முல்லைக் காட்டிலே உலவி உலவி ஊதிய பின் ஒரு மரத்தடியில் முகத்தில் வேர்வை முத்து முத்தாய் அரும்ப நின்றூதும் கோவிந்தன் குழலிசை எப்படி வசியப் படுத்துகிறது தெரியுமா?

ஆநிரைகளை அழைக்கும் குரலோசை கூடு களுக்குப் போன பறவையினங்களின் காது களில் விழுகிறது. எத்தனை வகையான பறவைகள்! அவை அப்படியே பறந்து வந்து வண்ண வண்ணச் சிறகுகளை விரித்துக் கொண்டு வெட்டி விழுந்த காடுகள் போலக் கண்ணனைச் சூழ்ந்து கிடக்கின்றன. வயிருரப் புல் மேய்ந்து வந்த பசுத்திரள்களோ, கால் களைப் பரப்பிக் கொண்டு தலைகளைத் தொங்க விட்ட வண்ணமாகக் கிடக்கின்றன. அவற்ருல் காதுகளை அசைக்கவே முடிய வில்லை. சிறிது அசைத்தாலும் அந்த இசை யானந்த லாகிரியை அனுபவிப்பது தடைப் பட்டுவிடும் அல்லவா?

இவ்வாறு சகல ஜீவராசிகளும் ஈடுபட்டு மெய் மறக்கும் வண்ணம் குழலூதுகிருன் கண்ணபிரான். சகல ஜீவராசிகளும் தானுக வும், தானே சகல ஜீவராசிகளாகவும் மாறும் பரவச நிலையிலே பெரியாழ்வார் பாடிய பாசுரம் இது :-

சிறுவிரல் கள்தட விப்பரி மாறச்
செங்கண்கோடச்செய்யவாய்கொப் பளிப்பக்
குறுவெயர்ப் புருவம கூட லிப்பக்
கோவிந்தன குழலகொ டூதின போது
பறவையின கணஙகள் கூடு துறந்து
வந்து சூழ்ந்துபடு காடு கிடபபக
கறவையின் கணஙகள கால்பரப் பிட்டுக்
கவிழ்ந்திறங் கிச்செவி யாட்டகில் லாவே.

கண்ணன் குழல் ஊதுகிருன், ஊதுகிருன் ஊதிக்கொண்டே நிற்கிருன். சிவந்து மலர்ந்த தாமரைமலரை வண்டுகள் சூழ்ந்துகொண்டது போலத் தலைமுடி சுருண்டு சுருண்டு விளங்கு கிறது. அந்த முகமலரிலிருந்து குழலின் வழியே பெருகும் கீதம் இன்னும் பல விநோத மான ரசிகர்களைக் கவர்ந்திழுக்கிறது.

குழலிசை வெள்ளம் பெருகியதும் கூட்டங் கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்த மான்கள் மேய்வதை விடுத்து, பசியையும் மறந்து விடுகின்றன. மேய்ந்த புல்லும் கடைவாய் வழியாக நழுவிவிடும்படி அந்த ஓசையைக் கேட்டுக் கொண்டே கோபாலன் இருக்கு மிடத்தில் வந்து நிற்கின்றன. கவ்வின புல்லை இறக்கவுமில்லை; உமிழவுமில்லை; அப்படிப் பரவச நிலை. அது மட்டுமா? அவை முன்னும் போகவில்லை; பின்னும் போகவில்லை; பக்கங் களிலும் அசையவில்லை. ஓவியத்தில் வரைந் திருக்கும் மான்கள்தாமோ என்றுகூடச் சந்தேகம் ஏற்படுகிறது. வேய்ங்குழல் இசை யமுதத்தைச் செவியில் வார்க்கிறது. இதயத் தில் இன்பத்தைப் பொழிகிறது. அந்த மேய்ச்சல் தரைக்கும் மேலான மேய்ச்சல் இடத்தை மனக்கண் முன் காட்டுகிறதா? அந்தப் பசிய புல்லைக்காட்டிலும் சிறந்த பசும்புல்லை அருந்திப் பசி தீர்ந்துவிட்டதா? அப்படி என்ன தான் மாயம்நிகழ்ந்துவிட்டது? மனம் போலத் துள்ளிப் பாயும் மான்களை மயக்கிய வேணுகானம், மான் போலத் துள்ளிப் பாயும் பெரியாழ்வாரின் உள்ளத்தை யும் அல்லவா வசீகரித்துவிட்டது! அந்த வசீகரிப்புத்தான் பாசுரத்தின் வடிவாக வெளிப்படுகிறது.

மயிலின் தோகையால் தன் முடியை அலங் கரித்துக்கொண்டிருக்கிருன் கண்ணன். அந்த முடிக்குத் தோகை அழகா? அல்லது அந்தத் தோகைக்கு முடி அழகா? எப்படிச் சொல்வது? அவன் கண்கொள்ளாத அழகை யும் அலங்காரத்தையும் என்னென்பது? இடையிலே செம்பட்டாடை அணிந்திருக் கிருன். யசோதையின் செல்வப் பிள்ளை அல்லவா அவன்? விலையுயர்ந்த ஆடை அணிகளால் எழிற்கோலம் கொண்டிருப் பதில் வியப்பென்ன இருக்கிறது? வேய்ங் குழலும் வாயுமாகத் தோன்றும் அந்த நீல மேனிதான் ஆடை அணிகலன்களுக்குச் சோபை ஊட்டுகிறது. அந்த மனமோகன திவ்ய சௌந்தரியக் கொள்ளையில் இயற்கை யாகிய மோகினியும் மோகித்து நிற்கிருள்.

அந்தத் தெய்விக இசை சராசரங்களை எல்லாம் உள்ளுருக்கி விடுகிற காரணத்தால் மரங்களும் ஆனந்தக் கண்ணீர் பொழிவது போலே தாரை தாரையாகத் தேன் சொரி கின்றன. பூச்செடிகளும் பூரித்துப் போய்ப் பூச்சொரிகின்றன மரக்கிளைகள் செவி சாய்ப்பது போல் தாழ்கின்றன. குழலிசை அந்த மரங்களின் செவிகளில் மாயக் கதைகள் பேசுகின்றனவோ? அவன் அசையும் இடங்கள், அடிபெயரும் இடங்கள் எல்லாம் அவனை நோக்கி மரம் செடி கொடி கள் எல்லாம் அஞ்சலிக்கின்றன. கோவிந் தனைக் கண்டு மோகலாகிரி கொண்ட கோபி கையர் போலே இயற்கைத் தேவியும் மோக வசமாகி விடுகிருள். அந்த அமுதகீத வலை யிலே சிக்குண்ட பெரியாழ்வாரின் உள்ளம், பிருந்தாவனம் எங்கும், செவிகளாய் அந்த மோகனகீதத்தைப் பருகிக் கொண்டிருக் கிறது. எங்கும் விழிகளாய் அந்த மோகன எழிலைப் பார்த்துக்கொண்டிருக்கிறது அந்த ரூப சௌந்தர்யமும், குண சௌந்தர்யமும் கீதமாகப்பெருக்கெடுத்து ஓடி அனைத்தையும் தன் வயப்படுத்தி விடுகின்றன.

நாக்கின் சுவையைச் செவியிலே புலப் படுத்திப் பகுத்தறிவற்ற பிராணிகளையும் வசீகரித்து உயிர்க் குலத்தைச் சகோதரத் துவம் என்னும் தெய்விகபலத்தால் பிணித் திருக்கும் அன்புக் கண்ணனின் அருள்கீதம் சராசரம் அனைத்தையும் ஒருங்கே தழுவி ஆட்கொள்கிறது. பரமபத சொர்க்கத்தையும் இந்தப் பாருலகிற்கு எடுத்துக்கொண்டு வந்து விடுகிறது. மறுமைப் பேரின்பத்தையும் இம்மை இன்பமாகக் காட்டுகிறது; இந்த அற்புத லீலா விநோதத்திலே வேற்றுமை களெல்லாம் மறைந்தொழிந்துவிடுகின்றன என்று நமக்குச் சுட்டிக் காட்டி உணர்த்து

கிறார் பெரியாழ்வார். அந்தப் பிருந்தாவனக் காட்சியை அனுபவித்து அனுபவித்துத் தாமும் ஒரு கோபிகையாகவே மாறவிடுகிறார் பெரியாழ்வார்.

இடது மேல்வாய்ப் புறத்தை இடது தோளோடு சாய்த்து இரு கரங்களும புல்லாங் குழலோடு சேரப் புருவம நெறிந்து மேலே கண்ணன வேணுகானம செய்கிறான். வயிறு குடம் போலக் காட்சியளிக்கிறது. காற்றினால் பூரித்து நிறுத்தி, மெய்யினால் விட்டு விட்டு ஊதும்போது குழலின் துளைக்கு அளவாக உதடுகள் இரண்டும் குவிந்து காணப்படு கின்றன. காட்டிலே பல இடங்களிலும் மேய்ந்து கொண்டிருந்த பசுக்கள் வெகு தொலைவில் விலகிப் போய்விடாத வண்ணம் குழலிசைத்துக்கொண்டிருக்கிறான். ஆனால் பசுக்களை முந்திக்கொண்டு வந்து சேர் கின்றனர்கள் கோபிகாரமணிகள். 'என்னை நோக்கி ஊதினான் கண்ணன்!' என்று பெருமையடித்துக் கொண்டு வந்து நிற் கிறார்கள் ஒவ்வொருவரும். அவர்கள் அனைவரும் தங்களை மறந்து வேய்ங்குழல் இசையோடு ஒன்றி லயித்துவிடுகிறார்கள்

'என்ன கீதம்! என்னகீதம்!' என்று பன்னிப் பன்னிக் கேட்கிறது ஆழ்வார் நெஞ்சம். கோபாலன் பசுக்களையும் கோபிகைகளையும் தேடிக் குழலிசைக்கிறான். பரமாத்மா ஜீவாத்மாவை அல்லவா தேடி ஜீவகீதம் பொழிகிறது!

இந்த அபூர்வக் காட்சிகளையெல்லாம் அனுபவித்து நிற்கும் பரவச நிலையிலே ஆழ் வாரின் கருவிகரணங்களெல்லாம் சிந்தை யாக, விழிகளாக மாறிவிடுகின்றன. கோபாலன் உள்ளங்கவர் கள்வனாகிறான். இந்த அனுபவ நிலை அவரை இசைமயமாக வும் அன்புமயமாகவும் பக்திமயமாகவும் உயர்த்தி விடுகிறது.

செங்கமலக் கண்ணன் சேவை சாதிக்கும் கோலங்கள் மூன்று கோகுலபாலனாக வருவது ஒன்று ஆநிரைகளுக்கும் கோபி யருக்கும் தோழனாக வருவது ஒன்று. வேணு கானக் கோபாலனாக காட்சி தருவது ஒன்று. இந்த மூன்று திருக்கோலங்களும் பெரியாழ் வாரின் கண்ணிலும் கருததிலும ஊனிலும் உயிரிலும் நீக்கமற நிறைந்துவிடுகின்றன

வித்தில் அடங்கிய ஆலவிருட்சம் போலே பெரியாழ்வாரின் திருமொழியிலே ஓங்கி உலகளந்த உத்தமனின் விச்வரூப தரிசனம் அடங்கியிருக்கிறது. அதனைத் தாமும் கண்டு பக்தருலகுக்கும் காட்டுகிறார் பெரியாழ்வார். பெரியாழ்வார் உண்மையிலேயே பெரியாழ் வார்தாம்.

## சென்னை, மாணவர் இல்லத்தின் முத்துவிழா

சென்னை, மயிலாப்பூரில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம் தனது 75-ஆம் ஆண்டு நிறைவு விழாவாகிய முத்துவிழாவை, 1981 பிப்ரவரி 13 முதல் 16 தேதி வரை நான்கு நாட்களுக்கு விமரிசையாகக் கொண்டாடியது

ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் பொதுத்தலைவராகிய ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தஜி மகராஜ் அவர்கள் இந்த முத்துவிழாவினைத் துவக்கி வைத்தார்கள்.

சுவாமி தபஸ்யானந்தர், சுவாமி சர்வக்ஞானந்தர், சுவாமி சோமானந்தர், சுவாமி சம்பிரகஞானந்தர், சுவாமி கீர்த்திதானந்தர் ஆகியோரின் உரைகள் விழாவில் இடம் பெற்றன.

தமிழக ஆளுநர், மாண்புமிகு சாதிக் அலி அவர்கள் 15 ஆம் தேதி நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்தினார்.

தமிழக முதல்வர், மாண்புமிகு எம். ஜி. ராமசந்திரன் அவர்கள் 16 ஆம் தேதி நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்து சிறப்புரை வழங்கினர்.

டாக்டர் சி. ராகவாச்சாரி, 'அண்ணா' சுப்ரமண்யம், டி. வி. விசுவநாதன், எஸ். கே. சிவராமன், பி. ஆர். சுப்பிரமணியம், எஸ். எம். கௌரிசங்கர், திருமதி சுலோசனா சேகர், தி. சு. அவினாசிலிங்கம், எஸ் பாலகிருஷ்ணஜோஷி, சி. ஆர். பட்டாபிராமன், கே. பி. சுப்பிரமணியன். சி. ராமதாஸ், டாக்டர் கே. வேங்கடசுப்ரமண்யம், கலைமகள் ஆசிரியர் கி. வா ஜகந்நாதன் ஆகியோர் விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

முத்துவிழா காணும் இல்லத்தின் பழைய மாணவர்களான ஒய்வுபெற்ற நீதிபதி பி. எஸ் கைலாசம், மேஜர் ஜெனரல் எஸ்.பி. மகாதேவன், எம். கே. பாலசுப்ரமணியன், ஐ ஏ. எஸ் ஆகியோரின் உரைகளும் விழாவில் இடம் பெற்றிருந்தன.

மற்றும் ஊர்வலம், பக்திப்பாடல்கள், ஹரிகதை, இந்தியாவின் கிராமிய நடனங்களின் கலைநிகழ்ச்சி, ஆண்டாள் & திருவிளையாடல் புராணம் நாடகங்கள், வேதபாராயணம், விசேஷபூஜை, ஹோமம் ஆகியவையும் முத்துவிழாவின் சிறப்பு அம்சங்களாகத்திகழ்ந்தன.

(124-ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிசம்பர் 23 முதல் 29 வரை நடைபெற்ற மாநாட்டு நிகழ்ச்சி நிரல்களைப் பற்றிய ஒரு சிறு குறிப்பு வருமாறு :-

ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் மாநாட்டின் நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. காலை நிகழ்ச்சி 9 மணிக்குத் துவங்கி 11-30 மணிக்கு நிறைவு பெற்றது. மாலை நிகழ்ச்சி 3 மணி முதல் 6-30 மணி வரை நடைபெற்றது.

23-12-80 செவ்வாய்க்கிழமை காலை நிகழ்ச்சி : பூஜ்ய ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தஜி மகராஜ் அவர்கள் மாநாட்டின் துவக்க உரையை நிகழ்த்தினர். அவரது உரையின் தமிழ் மொழிபெயர்ப்பை சுவாமி சர்வக்ஞானந்தர் படித்தார். மாநாட்டின் சிறப்பு மலரையும், விவேகானந்தரின் கருத்துக்களின் தொகுப்பான Rebuild India என்ற மலிவுப்பதிப்பு நூலையும் பூஜ்ய ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தஜி மகராஜ் அவர்கள் வெளியிட்டார்கள். சுவாமி ஹிரண்மயானந்தர், சுவாமி வந்தனானந்தர், சுவாமி லோகேஸ்வரானந்தர் ஆகியோரின் உரைகளும் காலை நிகழ்ச்சியில் இடம் பெற்றன.

23-12-80 மாலை நிகழ்ச்சி : 'ஸ்ரீராமகிருஷ்ண இயக்கம்' என்ற தலைப்பில் சுவாமி கம்பீரானந்தர், சுவாமி புதானந்தர், கோயமுத்தூர் வித்யாலயாவைச் சேர்ந்த தி. சு. அவினாசிலிங்கம், சென்னை மடத்தைச் சேர்ந்த பேராசிரியர் சி. எஸ். ராமகிருஷ்ணன், சாரதா மடத்தைச் சேர்ந்த சன்னியாசினி பரிவ்ராஜிக சிரத்தாப்ராணா ஆகியோரும் மற்றும் சிலரும் உரையாற்றினர்.

24-12-80 புதன்கிழமை காலை நிகழ்ச்சி : 'ஸ்ரீராமகிருஷ்ண சங்கம்' என்ற தலைப்பில் சுவாமி பூதேஷானந்தர், சுவாமி ஹிரண்மயானந்தர், சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த எஸ். கே. சிவராமன் ஆகியோரும் மற்றும் சிலரும் உரை நிகழ்த்தினர்.

24-12-80 மாலை நிகழ்ச்சி : 'நடைமுறையில் வேதாந்தம்' என்ற தலைப்பில் சுவாமி தபஸ்யானந்தர், சுவாமி ரங்கநாதானந்தர், சென்னையைச் சேர்ந்த திருமதி அனுசுயா சுப்பிரமணியன் ஆகியோரும் மற்றும் சிலரும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். 24-12-80 இரவு 'கிறிஸ்மஸ் ஈவ்' நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து சொற்பொழிவுகளும் இடம் பெற்றன.

25-12-80 மாலை நிகழ்ச்சி 20,000 பேர் கலந்துகொள்ளத் தக்க நவீன ஏர்கண்டிஷன் வசதிகளைக் கொண்டதும், கல்கத்தா நகரத்தில் அமைந்திருப்பதுமான நேதாஜி இண்டோர் ஸ்டேடியத்தில் நடைபெற்றது. அங்கு 'ஸ்ரீராமகிருஷ்ணர் உலகிற்கு வழங்கிய செய்தி' என்ற தலைப்பில் சுவாமி கம்பீரானந்தர், சுவாமி ரங்கநாதானந்தர், உட்பட பலரும் சொற்பொழிவாற்றினர்.

26-12-80 வெள்ளிக்கிழமை காலை நிகழ்ச்சி: 'இந்தியாவில் ஸ்ரீராமகிருஷ்ண மடம், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஆகியவற்றின் பணிகள்' என்ற தலைப்பில் சுவாமி கஹனானந்தர், சுவாமி கீதானந்தர் சுவாமி ஆத்மானந்தர் ஆகியோரும் மற்றும் சிலரும் பேசினர்.

26-12-80 மாலை நிகழ்ச்சி கல்கத்தா நேதாஜி இண்டோர் ஸ்டேடியத்தில் நிகழ்ந்தது. 'மதங்களின் கருத்துக்கள்' என்ற தலைப்பில் இந்துமதம், கிறிஸ்தவம், இஸ்லாம், சமணம், பௌத்தம், யூத மதம், சீக்கிய மதம், ஸ்ரீராமகிருஷ்ணரின் சர்வசமய சமரசம் போன்ற தலைப்புகளில் பலரும் உரையாற்றினர். இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த சுவாமி லோகேஸ்வரானந்தர் எல்லா மதக்கருத்துக்களையும் தழுவி அரிய உரை நிகழ்த்தினர்.

27-12-80 சனிக்கிழமை காலை நிகழ்ச்சி : 'வெளிநாடுகளில் ஸ்ரீராமகிருஷ்ண இயக்கத்தின் பணி' என்ற தலைப்பில் மேலைநாட்டுக் கிளைகளில் பணி புரியும் சுவாமி சுவாஹானந்தர், சுவாமி பவ்யானந்தர், சுவாமி பாஸ்கரானந்தர், சுவாமி பிரபுத்தானந்தர், சுவாமி நித்தியபோதானந்தர் ஆகியோரும் மற்றும் சிலரும் தம் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

27-12-80 மாலை நிகழ்ச்சி : 'ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்திற்கு இருந்து வரும் பிரச்னைகள்' என்ற தலைப்பில சுவாமி வந்தனானந்தர், சுவாமி ஆத்மஸ்தானந்தர் ஆகியோரும் மற்றும் சங்கத்தின் பல கிளைகளைச் சேர்ந்த அன்பர்களும் உரையாற்றினர்.

28-12-80 ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிக்கு மாநாட்டிற்கு வந்திருந்த அன்பர் 57 பஸ்களில் காமார்ப்புகுர், ஜயராம்பாடி ஆகிய புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசிக்கப் புறப்பட்டுச் சென்றுவிட்டு அன்றுமாலை பேலூர் மடம் திரும்பினர். தூய அன்னையாரின் ஜயந்தி நாளான அன்று மாலை 'ஸ்ரீ சாரதா தேவியாரின் வாழ்வும் வாக்கும்' குறித்து பேலூர் மடத்தில் சுவாமி பூதேஷானந்தரும் சுவாமி லோகேஸ்வரானந்தரும் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

29-12-80 திங்கட்கிழமை காலை நிகழ்ச்சி : 'ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் பணிகளில் பக்தர்கள் ஏற்கும் பங்கு' என்னும் தலைப்பில் சுவாமி ஹிரண்மயானந்தர், சுவாமி பிரபானந்தர், சுவாமி ஸ்மரணானந்தர் ஆகியோரும், மற்றும் சங்கத்தின் கிளைகளைச் சேர்ந்த பல பக்தர்களும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துப் பேசினர்.

29-12-80 மாலை நிகழ்ச்சி : பூஜ்ய ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தஜி மகராஜ், சுவாமி வந்தனானந்தர், சுவாமி லோகேஸ்வரானந்தர் ஆகியோரும் மற்றும் சில அன்பர்களும் மாநாட்டின் கொள்கைகளை விளக்கி நன்றி தெரிவித்ததுடன் மாநாடு சிறப்பாக நிறைவு பெற்றது.

மாநாட்டில் இங்கு குறிப்பிடப் பெற்றவர்களைத் தவிரவும், உலகின் பல பாகங்களைச் சேர்ந்த சங்கத்தின் பிரதிநிதிகளும் ஒவ்வொரு நாளும் உரை நிகழ்த்தினர். மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற எல்லா சொற்பொழிவுகளும் அடங்கிய ஆங்கில நூல் ஜூன் முதல் வாரத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.

பேலூர் மடத்தின் அருகிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் சாரதா பீடத்தின் கல்லூரிக் கட்டிடத்தில் மாநாட்டையொட்டி டிசம்பர் 23 முதல் ஜனவரி முதல்தேதி வரை கண்காட்சி நடைபெற்றது. ஒரு லட்சத்து நாற்பத்தைந்து ரூபாய் செலவில் அமைக்கப் பெற்ற இந்தக் கண்காட்சியில் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் எல்லாக் கிளைகளின் புகைப்படங்கள், அவற்றின் பணிகளை விளக்கும் புகைப்படங்கள், ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த கருத்துக்களை விளக்கும் வண்ண ஓவியங்கள் ஆகியவை இடம் பெற்றிருந்தன.

டிசம்பர் 26, 27, 29 தேதிகளில் மாநாட்டில் கலந்துகொண்ட அன்பர்கள் சிறிய சிறிய குழுக்களாக அமைந்துத் தங்களுக்குள் கலந்துரையாடித் தங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின தலைமைக்கு நேரிலும் எழுத்து மூலமும் தெரிவித்தனர்.

மாநாடு நடைபெற்ற நாட்களில் இரவு உணவுக்குப் பிறகு ஒரு மணி நேரம் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கையை விளக்கும் நாடகம், பக்திப் பாடல்கள் போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன.

முடிவுரை

உலகின் பல பாகங்களிலும் இயங்கி வரும் ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த இயக்கத்தின் பிரதிநிதிகளாக இம் மாநாட்டில் 12,000 பேர் கலந்து கொண்டனர். 12, 000 பேர்களுக்கு மட்டுமே பேலூர் மடத்தில் இட வசதி செய்து தரமுடியும் என்பதனால் மேற்கொண்டு அங்கத்தினர்களை மாநாடு ஏற்றுக்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டது. எனவே தான் கடைசி இரண்டு மாதங்களான நவம்பர் டிசம்பர் மாதங்களில் மாநாட்டில் கலந்து கொள்ள பெயர் கொடுத்த அன்பர்களை மாநாட்டுக்குழு ஏற்றுக்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டது.

மாநாட்டில் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த சாதுக்களும் பிரம்மசாரிகளும் 518

பேர் கலந்துகொண்டனர். மற்றும் ஸ்ரீராம கிருஷ்ண சங்கத்தின் அங்கத்தினரல்லாத தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த துறவி களும் பக்தர்களும் மாநாட்டின் பிரதிநிதி களாக பங்கேற்றிருந்தனர். தமிழ் நாட்டி லிருந்து சுமார் 350 பக்தர்கள் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

எளியதாகவும் ஆனல் அதே சமயத்தில் அழகியதாகவும் மாநாட்டுப் பந்தல் அமைந் திருந்தது. போதிய இடவசதி இன்மையால் பிரதிநிதிகளாக வந்திருந்த அன்பர்கள் மட் டுமே மாநாட்டில் கலந்துகொள்ள அனுமதிக் கப்பட்டிருந்தனர். பிரதிநிதிகளாக வந்திருந் தவர்களைத் தவிர பொதுமக்களான உள்ளூர் வாசிகளும் மாநாட்டில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்க வேண்டும் என்பதற்காகவே 20.000 மக்கள் கலந்துகொள்ள கல்கத்தா நேதாஜி இண்டோர் ஸ்டேடியத்தில் இரண்டு நாள் மாலை நிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றன.

காமார்ப்புகுர், ஜயராம்பாடி, தட்சிணேசுவ ரம், பேலூர் மடம், காசீப்பூர், உத்போதன் ஆகிய இடங்களைப் பற்றிப் படித்தும் கேட் டும் இருந்த அன்பர்கள் அந்த இடங்களை முதல் முறையாக நேரில் தரிசித்தபோது பரவசத்தில் ஆழ்ந்தனர்.

மாநாட்டிற்கு முன்பும், மாநாட்டின் போதும், மாநாட்டிற்குப் பின்பும் தனித்தனி சிறிய குழுக்களாக அமைத்துக்கொண்டு அன்பர்கள் காமார்ப்புகுர், ஜயராம்பாடி, தட் சிணேசுவரம், சாரதா மடம், காசீப்பூரில் ஸ்ரீராமகிருஷ்ணர் மகாசமாதி எய்திய இடம், அவரது திருமேனி தகனம் செய்யப்பட்ட இடம், பாரநகரில் முதன்முதலாக ஸ்ரீராம கிருஷ்ண மடம் துவக்கப்பட்ட இடம், கிரீஷ் கோஷ் வீடு, உத்போதன், நிவேதிதா உயர் நிலைப்பள்ளி, பலராம் மந்திர், விவேகானந்தர் பிறந்த வீடு, மகேந்திரநாத் குப்தரின் (ம-) வீடு, அபேதானந்தரின் ஸ்ரீராமகிருஷ்ண-வேதாந்த மடம், கார்க்கூர்காச்சி ஆகிய புனிதத் தலங்களைத் தரிசித்து வந்தனர்.

மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் தங் கள் வாழ்நாளில் மறக்கவே முடியாத ஓர் ஒப்பற்ற நிகழ்ச்சியாகப் பரமஹம்சதேவரின் சாந்நித்தியம் கமழ்ந்த இந்த மாநாட்டைக் குறித்துக் கருதுகின்றனர்.

மாநாடு கோலாகலமாகவும் கண்கொள் ளாக் காட்சியாகவும் எப்படி நடைபெறுவது பொருத்தமோ அப்படி நடந்தேறியது.

பூஜ்ய ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தஜி மகராஜ், பூஜ்ய ஸ்ரீமத் சுவாமி நிர்வாணனந் தஜி மகராஜ், பூஜ்ய ஸ்ரீமத் சுவாமி அபயா னந்தஜி (பரத் மகராஜ்) ஆகியோர் மாநாட் டுப் பந்தலில் வீற்றிருந்தது குறிப்பிடத்தக்க விசேஷ அம்சமாகும்.

54 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற முதல் மாநாட்டில் கலந்துகொள்ளும் பேறு பெற்ற சிலர் இப்போது நடைபெற்ற இரண் டாவது மாநாட்டிலும் கலந்துகொண்டனர்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் என்ற சக்திதான் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தை பின்னணியில் இருந்து உண்மையில் இயக்கிக் கொண் டிருக்கிறது. பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் விராட் சொரூபமாக சங்கம திகழ்ந்து வரு கிறது. சங்கத்திடம் கொள்ளும் பக்தியும் விச் வாசமும் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் கொள்ளும் பக்தியே ஆகும்.

ஸ்ரீராமகிருஷ்ணர், சங்கத்தை ஒரு கருவி யாகக்கொண்டு ஸ்ரீராமகிருஷ்ண-விவேகா னந்த இயக்கத்தின பணிகளைத் தாமே நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதுதான் உண்மை. ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த இயக்கம் தனியொரு மனிதர் எவரையும் சார்ந்திருக்கவில்லை. தனி மனிதரான நாம் இருப்பினும் இல்லாவிடினும் ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த இயக்கம் நாளுக்கு நாள் நிச் சயம் வளரவே செய்யும். இந்தப் புனித இயக்கத்தின் வளர்ச்சிக்குத் துணை நிற்பது நமது பாக்கியமாகும்.

ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த அடிசுவட் டைப் பின்பற்றி வாழும் இயக்கததைச் சேர்ந்த அன்பர்களின் உன்னத வாழ்க்கை தான் இந்த இயக்கத்திற்கு மிகவும் தலை சிறந்த பிரசாரமாக அமைய முடியும். அத் தகைய சீரிய வாழ்க்கையே உண்மையான ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த வழிபாடும் ஆகும்.

# ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

## சென்னை—600004

## 1981 மார்ச் மாத நிகழ்ச்சிகள்

**பகவான் ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தி விழா**

8-3-81 ஞாயிறு ஜன்ம திதி. விசேஷ பூஜை, பஜனை, ஹோமம் முதலியன (காலை 5 மணி முதல் 11-30 மணி வரை)

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பற்றிய சொற்பொழிவுகள் (மாலை 7 மணிக்கு)

பேசுவோர் : சுவாமி தபஸ்யானந்தர், சுவாமி முக்கியானந்தர்

**ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தியின் சிறப்பு விழா நிகழ்ச்சிகள்**

13-3-81 வெள்ளி மாலை 6 மணி. சுவாமி விவேகானந்தர் விழா

தலைவர் : சுவாமி தபஸ்யானந்தர்

பேசுபவர் : திரு E. சுப்பிரமணியம், எம். ஏ.

14-3-81 சனிக்கிழமை மாலை 6 மணி. அன்னை ஸ்ரீசாரதாதேவியார் விழா

தலைவர் : சுவாமி சோமானந்தர்

சொற்பொழிவாளர் : திரு எஸ். சங்கரநாராயணன்

15-3-81 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30. ஸ்ரீராமகிருஷ்ணர் விழா

தலைவர் : சுவாமி சோமானந்தர்

பேசுபவர் : திரு ஏ. ஜி. சிவராமகிருஷ்ணன்

ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தி சிறப்பு விழா நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக மார்ச் 13 முதல் 15 தேதி வரையில் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் மூன்று நாள் அந்தர்யோகம் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்புவோர் ஸ்ரீராமகிருஷ்ண மடம் மேனேஜரிடம் தொடர்பு கொள்ளலாம்.

சத்சங்கம் : ஞாயிறுதோறும் மாலை 4 மணி முதல் 5-30 வரை

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் (1-3-81 & 29-3-81)

1-3-81 1. ஸ்ரீமத் பாகவதம் திரு 'அண்ணு' சுப்ரமண்யம்

29-3-81 2. ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம்—திரு வி. எஸ். வி. குருஸ்வாமி சாஸ்திரிகள்

மாலை 5-35 மணி முதல் 6-30 மணி வரை சுவாமி கபீரானந்தர் ஸ்ரீமத் பகவத்கீதை என்ற தலைப்பில் மார்ச் 1, 29 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்துவார்.

வார நாட்களில் நடைபெறும் சொற்பொழிவுகள் (மாலை 5-30 மணிக்கு)

1. திங்கள் — ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள்—சுவாமி அமிர்தானந்தர்
2. செவ்வாய் — பக்தி யோகம் - சுவாமி கபீரானந்தர்
3. புதன் — உபநிஷதம்—சுவாமி அமலாத்மானந்தர்
4. வியாழன் — விவேக சூடாமணி—'அண்ணு' சுப்ரமண்யம்
5. வெள்ளி — விஷ்ணு புராணம்—டாக்டர் என். வீழிநாதன்
6. சனி (மார்ச் 7 மட்டும்) — அத்தியாத்ம ராமாயணம்—ஜஸ்டிஸ் பி. ராமகிருஷ்ணன் (ரிடயர்டு)

**விசேஷ தினங்கள் :**

| | | |
|---|---|---|
| 4-3-81 | புதன் | மகா சிவராத்திரி |
| 20-3-81 | வெள்ளி | டோல் பூர்ணிமா—ஸ்ரீசைதன்ய ஜயந்தி |
| 22-3-81 | ஞாயிறு | ஸ்ரீசைதன்ய ஜயந்தி பொதுக்கூட்டம் (மாலை 5-30 மணிக்கு) |
| 24-3-81 | செவ்வாய் | சுவாமி யோகானந்த ஜயந்தி |

2-3-81 & 16-3-81 ஆகிய ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு ஸ்ரீராம நாம சங்கீர்த்தனம் நடைபெறும்.

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொலைபேசி : 71231

தலைவர்,

ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை.

# காந்தியடிகளின் பொன்மொழிகள்



## பொன்மொழிகள்

★ சூரிய அஸ்தமனத்தையும், நிலாவின் அழகையும் கண்டு வியக்கும் போது சிருஷ்டிகர்த்தாவை நான் கும்பிடுகிறேன். அப்போது என் ஆத்மா விசாலமடைகிறது. இந்தச் சிருஷ்டிகளில் அவரையும் அவருடைய கருணையையும் காண நான் முயலுகிறேன். அவரைப்பற்றிச் சிந்திக்க உதவவில்லை என்ருல் சூரியாஸ்தமனங்களும், சூரியோதயங்களும் எனக்குத் தடங்கல்களாகவே இருக்கும். ஆத்மாவின் போக்குக்குத் தடை செய்யும் எதுவும் ஒரு மாயை; ஒரு வலை. அது விமோசன மார்க்கத்தில் நமக்கு அடிக்கடி தடங்கலைச் செய்யும் உடலைப் போன்றது.

★ ஹிம்ஸைக்கு மத்தியில் அஹிம்ஸா நியதியைக் கண்டுபிடித்த ரிஷிகள் நியூட்டனைவிடப் பெரிய மேதாவிகள்; வெல்லிங்டனைவிடப் பெரிய போர்விரர்கள். அந்த ரிஷிகள் ஆயுதப் பிரயோக முறைகளையெல்லாம் தெரிந்து வைத்திருந்தபோதிலும், நொந்துபோன உலகத்துக்கு அஹிம்ஸையின் மூலம்தான் விமோசனம் காணமுடியுமே தவிர, ஹிம்ஸையின் மூலம் காண முடியாதென்று போதித்திருக்கிருர்கள்.

**அசோகா பாக்குத்தூள் கம்பெனி பிரைவேட் லிமிடெட்**
"அசோகா பாக்டரி"
தபால் பெட்டி நெ. 3702
11/234, டாக்டர் நஞ்ஜப்பா ரோடு
**கோயமுத்தூர்-641018**